# தளிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தரமான முறையில்

ஆடைகளை றைக்கிளீன் செய்ய

# சன்லைற் றைக்கிளீனேர்ஸ்

பெரியகடை, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

தொலைபேசி:→ **22825**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தளிர்

திரள்: 3 இல: 3, 4

ஆனி - ஆடி; 1985

விலை ரூபா: 4


## உள்ளே


- ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இந்தியா வெற்றி கொள்ளுமா?
- பொதுமக்கள்—இராணுவம் நல்லுறவு?
- தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் ஒடுக்குமுறைகளில் நிலச்சூறையாடல்
- தோட்டத் தொழிலாளரைப் பற்றிய பொய்மைகளும். உண்மைகளும்
- தென்னாசியப் பிராந்தியத்தில் தமிழீழப் போராட்டம் சோஷலிசப் பாதையின் திறவுகோல்
- பைபிளிலும் ஒரு 'யூலை' இனப்படுகொலை!
- நவகாலனித்துவம்
- எல்சல்வடோர்
- "பிரெஷ்டின்"
- பெண்களும் அவர்கள் மீதான பலாத்காரமும்



## தொடர்புகட்கு:

"தளிர்"

ஆசிரியர் குழு

யாழ். பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம்.


## வாசகர்களுக்கு!

★ தவிர்க்கமுடியாத காரணங்களால் ஆனி மாதத் தளிரை குறிப்பிட்ட திகதியில் வெளியிடமுடியவில்லை.

★ "தளிர்" பற்றியும், உள்நாட்டு-வெளிநாட்டு அரசியல்-பொருளாதார-சமூக நிலைமைகள் பற்றியும் ஆக்கங்களை வரவேற்கின்றோம்.

# கண்விழித்திருப்போம்!

தமிழீழ விடுதலைப் போராட்டமானது பல முனைகளிலும் கூர்மையடைந்து வரும் இக் கால கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை போன்றவையினால் எமது போராட்டம் ஒரு தேக்க நிலையினை அடைந்துள்ளது. இப் போர் நிறுத்தக் காலப்பகுதியானது மக்கள் மத்தியில் நிலவுகின்ற மாயைகளைப் போக்கி, அவர்களைக் கருத்து ரீதியாக வளர்த்தெடுப்பதற்கும், எமது பிரச்சினைகளைத்தீர்ப்பதற்கும், சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளற்ற ஒரு சமதர்ம அரசை நிறுவுவதே ஒரே வழி என்பதனை மக்கள் மத்தியில் உறுதியாக நிலை நிறுத்தவும் பயன் படுத்தப் படவேண்டியது அத்தியாவசியமானதாகும். இதற்கான சில முயற்சிகள் மேற் கொள்ளப் பட்டு வருவது வரவேற்கப்படவேண்டியதாகும்.

எதிரியுடனான யுத்தம் தற்காலிகமாக நிறுத்தப் பட்டிருக்கும் இக் காலப் பகுதியில் எமக்கிடையேயான முரண்பாடுகள் அதிகரிக்குமானால் அது எதிரிக்குத் துணை போகும் நடவடிக்கையாகவே அமையும். அற்பவேளை சிறிய பிரச்சினைகளைப் பெரிதாக்கி அதனூடாக விடுதலை அமைப்புகளுக்கிடையே மோதலை ஏற்படுத்துவதன் மூலமும் விடுதலை அமைப்புகளுக்குள்ளேயே பிளவுகளை ஏற்படுத்துவதன் மூலமும் எமது போராட்டத்தினைப் பின்தள்ளச் செய்வதற்கு சில பிற்போக்குச் சக்திகள் முயற்சி செய்யக் கூடும். எனவே விடுதலை அமைப்புக்கள் இவ் விடயத்தில் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும்.

துர்ரதிஸ்டவசமாக எழும் எமது உள் முரண்பாடுகளும், இயக்கங்களுக்கிடையிலான முரண்பாடுகளும் பேசித்தீர்த்துக் கொள்வதன் மூலம் எமது போராட்டத்தினை பலவீனப்படுத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகளை முறியடிக்க வேண்டும். இக்கால கட்டத்தில் எம்மக்களிடையே ஏற்படும் முரண்பாடுகளும் மோதல்களும் மக்களை போராட்டத்தில் நம்பிக்கையிழக்கச் செய்து பேச்சுவார்த்தையின் மூலம் பெறப்படக்கூடிய எமதுபோராட்டத்தினை நசுக்கக்கூடியதான அரை குறைத் தீர்வினை ஏற்பதற்கான மனமாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு வழிகோலிவிடலாம். எனவே பொறுப்புணர்வுள்ள விடுதலை அமைப்புகள் இவ்விடயத்தில் நிதானமாக சிந்தித்து செயற்படுவார்கள் என நம்புகிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிர் | தகவற்சேவை

## தென்னாபிரிக்காவில்...

மேற்கு ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் ஏகமனதாக நிறைவேற்றித் தென்னாபிரிக்க அரசைக் கண்டித்தமையும், உடனடியாக அவசரகாலச் சட்டத்தை நீக்கும்படி வற்புறுத்தியுள்ளமையும் முக்கியமான விடயங்களாகும். பெரும்பாலான மேற்கு ஐரோப்பிய நாடுகள் இதுவரை காலமும் தென்னாபிரிக்காவுடன் குறைந்தபட்சம் 'பின்கதவால்' எனும் உறவுகளை வைத்திருந்தன. றீகனின் அமெரிக்காவும் தவிர்க்க முடியாதபடி, தென்னாபிரிக்காவிற்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதிக்கும் தீர்மானத்தை எடுக்க வேண்டியேற்றப்பட்டுவிட்டது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பத்து வெளிவிவகார அமைச்சர்கள் அண்மையில் பிரஸல்ஸில் கூடியபோது "தென்னாபிரிக்காவில் தொடரும் மனிதவுடல் இழப்புக்கள் குறித்தும், நமீபிய சுதந்திரத்திற்கு முட்டுக்கட்டையாக அமையும் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டுவரும் அதன் போக்கு "குறித்தும் பலத்த எதிர்ப்புக் குரலை எழுப்பியுள்ளனர்"

றீகன் நிர்வாகம் தென்னாபிரிக்கா குறித்த தனது "ஆக்கபூர்வமான ஈடுபாடு" எனும் கொள்கை மூலம் மிகுந்த அதிருப்தியை உலகின் விடுதலையை நேசிக்கும் நாடுகளிடம் சம்பாதித்திருந்தது. இந்த "ஆக்கபூர்வமான ஈடுபாடு" உண்மையில் தென்னாபிரிக்காவின் கனிப்பொருள் வளங்களை சுரண்டுவதற்கே என்பது அனைவரும் அறிந்ததொன்று.

இதேவேளை சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸின் தலைவர் நெல்சன் மண்டெலாவை விடுவிக்கக் கோரியும் மேற்கு நாடுகள் மிகவும் வலியுறுத்தியுள்ளன. நெல்சன் மண்டெலாவை விடுவிப்பது தொடர்பாக தென்னாபிரிக்கத் தலைவரை நிறவெறியன் போதாவிற்கும் நெல்சன் மன்டெலாவிற்கும் இடையே நடைபெற்ற உத்தியோகபூர்வமான பேச்சுக்கள் தோல்வியிலேயே முடிவடைந்துவிட்டன.

தென்னாபிரிக்க மக்களின் மதிப்பையும் அன்பையும் நம்பிக்கையையும் பெற்ற தலைவர்களுள் நெல்சன் மண்டெலா முக்கியமானவராகக் கருதப்படுகிறார்.

## நிக்கரகுவாவில்...

கடந்த ஜூலை இருபதாம் திகதி தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான நிக்கரகுவா தனது புரட்சியின் ஆறாவது ஆண்டு நிறைவை, அதன் தலைநகரான மனேகுவாவில் கொண்டாடியது. சர்வாதிகாரி ஸோமோஸாவை 1979 இல் ஆட்சியிலிருந்து தூக்கி வீசியதிற்குப் பிறகு நடந்த வெற்றி விழாக்களுக்குப் பிறகு இம் முறையே மிகவும் அதிகளவு மக்கள் கொண்டாட்டங்களில் பங்கு கொண்டனர். ஐந்து லட்சம் மக்கள் கார்லோஸ்பொன்சேகா பிளாஸா எனும் இடத்தில் திரண்டு அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராகக் கோஷங்களையும், பாடல்களையும் முழங்கினர்.

'நிக்கரகுவாவில்தான் றீகனின் கல்லறை', 'விலைப்படமாட்டோம்; விட்டும் கொடுக்கோம்!' போன்ற சுலோகங்கள் நிக்கரகுவா எங்கும் பரந்த அளவில் காணப்பட்டன.

கடந்த சில வாரங்களாக றீகன் நிர்வாகம் நிக்கரகுவா மீது மேலும் பொய்க் குற்றச்சாட்டுகளையும் பழிகளையும் சுமத்த ஆரம்பித்துள்ளது. "சர்வதேச பயங்கரவாதத்தை" ஏற்றுமதி செய்யும் நாடுகளில் முக்கியமானது என நிக்கரகுவாவை றீகன் குறிப்பிட்டிருந்தார்.

நிக்கரகுவாவின் துறைமுகங்களில் கண்ணி வெடிகளை விதைத்தும், நிக்கரகுவா எதிர்ப்புரட்சியாளர்களான 'கொண்ட்ராஸ்' இற்கு போராளிகளை எவ்வாறு கொல்வது எனும் கைநூலை அச்சிட்டு வழங்கியதும் நிக்கரகுவாவின் ஸாண்டினோ விமான நிலையத்திற்குக் குண்டு வைத்ததும் அமெரிக்கா என்பதை, நிக்கரகுவாவின் ஜனாதிபதி டானியல் ஒட்டேகா மக்களுக்கு ஞாபகப்படுத்தினர். ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக "நியூயோர்க் டைம்ஸ்" போன்ற பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

சிறிய நாடு என்ற போதிலும் சர்வதேச அரசியலைப்பயன்படுத்துவதில் சாணக்கியமும், மக்களை நம்பி மக்கள் ராணுவத்தை அமைத்ததிலும், தனது கால்களில் நிற்பதனாலும் நிக்கரகுவா அமெரிக்க ஏகாதிபத்தியத்தை துணிவோடு எதிர்கொள்கிறது என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையும் பயிரை

## முளையில் தெரியும்

"இலக்கு" (சித்திரை-வைகாசி 1985) இதழில் சித்திரை 1985 தளிரில் பிரசுரிக்கப்பட்ட 'தென்னாசியச் சூழ்நிலையில் தமிழீழப் போராட்டமும் சோஷலிசத்திற்கான பாதையும்" என்ற கட்டுரைக்கும் தமக்கும் சம்பந்தமில்லை என்றும், அக் கட்டுரையிலுள்ள கருத்துக்கள் தளிருடையவையே என்றும் NLFT அறிவித்துள்ளது. எமது கருத்துக்களை எமது பெயரிலேயே வெளியிடும் துணிவு எமக்கிருக்கிறது. எமது கருத்துக்களை தனது பெயரில் வெளியிட்டதாக NLFT குற்றஞ் சாட்டியிருப்பது வேதனைக்குரியது. மேற்படி தலைப்பில் பிரசுரிப்பதற்கான கட்டுரை தருமாறு சில விடுதலை இயக்கங்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தோம். அதனடிப்படையில் NLFT சார்பில் அதன் உறுப்பினர் (X) ஒருவரிடம் கோரிக்கை விடுத்தோம். அவரினால் கையளிக்கப்பட்ட கட்டுரையே சித்திரை தளிர் இதழில் பிரசுரிக்கப்பட்டது. இக்கட்டுரை தளிரில் வெளிவந்தபிறகு இது சம்பந்தமாக கடிதத்தொடர்புகளும், NLFT உறுப்பினர் ஒருவருடன்நேரடியான சந்திப்புக்களும் நடைபெற்றன. இத்தொடர்புகளிலே இறுதியாக மேற்படி (X)என்ற உறுப்பினரால், "அமைப்பின் பெயரில் இக்கட்டுரை வருவதற்கும் தமக்கும் சம்பந்தமில்லை" என்று குறிப்பிட்டு NLFT யிடம் கையளிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட உறுதிமொழிக் கடிதத்தை தளிர் ஆசிரியர் குழு பார்வையிட்ட பின்னரே மறுப்பு வெளியிடுவதுபற்றிய இறுதி முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்தோம். (நாம் விரும்பினால் அக்கடிதத்தை பார்வையிடமுடியும் என்று NLFT முன்பு அறிவித்திருந்தது.)

அக் கடிதத்தை எமதுபார்வைக்கு தராமலே இலக்கிலே தளிரைக் குற்றம் சாட்டி வெளியிடப்பட்ட அறிக்கையானது NLFTன் நேர்மையையே சந்தேகிக்கவைக்கின்றது. மற்றும் மேற்படி கட்டுரையிலுள்ள கருத்துக்கள் NLFTஐச் சார்ந்த ஒருவனின் தனிப்பட்ட கருத்து என்பதில் எமக்கு சந்தேசமில்லை இது ஸ்தாபனத்தின் கருத்தல்ல' என்று NLFT எமக்கு அறிவித்துள்ளது. இன்றுவரை மேற்படி கடிதம் எமது பார்வைக்குக் கிடைக்கவில்லை. ஆயினும் மேற்படி கட்டுரை தளிரில் பிரசுரிக்கப்பட்டதால் விடுதலை ஸ்தாபனமான NLFTற்கு ஏற்பட்ட பிரச்சினைகளுக்காக வருத்தம் தெரிவிக்கிறோம்.

# அட்டைப்படத்திற்கு ஒரு கவிதை

"தீப்பொறி கனலும் உனது விழிகளுக்கும்
இரத்தம் படிந்த உனது கரங்களுக்கும்
நீ கூறு:
இரவு அகன்று விடும்
எந்தச் சிறையும், எந்தச் சங்கிலியும்
எஞ்சியிராது.
நீரோ இறந்துவிட்டான்
ஆனால் ரோம் இன்னும் இறக்கவில்லை.
ரோம் தன் கண்களால் தொடர்ந்தும் போரிட்டாள்
காய்ந்துபோன ஒரு கோதுமைக் கதிரின் விதைகள்
கோடிக்கணக்கான பசிய கதிர்களால்
சமவெளியை நிரப்பும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினையும்

# இந்தியா வெற்றி கொள்ளுமா?

மாகதன்

யாழ்ப்பாணத்தில் வெடிக்கத் தொடங்கிய ஆயுதப் போராட்டம் கொழும்பை இன்று திம்பு வரை நகர்த்தியுள்ளது. இவ் அரசியல் நகர்வில் கொழும்பு அரசியல் வட்டத்தை முதலில் நோக்குவோம். அதனைத் தொடர்ந்து தமிழீழப் போராட்டத்தினையும் அதில் இந்தியாவின் மத்தியத்துவத்தினையும் இந்நிலையில் தமிழ் மக்களின் எதிர்காலத்தினைப் பற்றியும் இங்கு அவதானிப் போம்.

சார்பு நிலைப் பொருளாதாரத்துக்குட் பட்ட இலங்கை போன்ற நாட்டில் பொருளாதார நெருக்கடி உச்சகட்டத்தினை அடையும் பொழுது பல் வேறு அரசியல் நெருக்கடிகள் தோன்றும். இலங்கை போன்ற பல் தேசிய இனங்கள் வாழ்கின்ற நாட்டில் இப்பொருளாதார நெருக்கடியானது இனப்பிரச்சினைகளாக வெடிப்பது இயல்பானது. அதுவும் பாராளுமன்ற ஆட்சியமைப்பு உள்ள இலங்கையில் பாராளுமன்ற அரசியல் சந்தர்ப்பவாதத்தின் பொருட்டு இவ் இனப்பிரச்சினை யானது மேலும் எண்ணெய் ஊற்றித் தூண்டப் படுவது சகஜம். இந்நிலையில் கொழும்பில் உள்ள அரசியல் கட்சிகள், அவற்றின் நலன்கள் இப் பிரச்சினையோடு எவ்வளவு தூரம் பின்னிப் பிணைந்துள்ளன என்பதை இங்கு நோக்குவோம்.

இன்று அதிகாரத்திலிருக்கும் ஐ. தே. க. ஆட்சியாளர் 3/4 பங்கு பெரும்பான்மைப் பலத் தினை பாராளுமன்றத்தில் கொண்டுள்ள அதே வேளையில் சகல நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்ட ஜனாதிபதியையும் அக்கட்சி கொண்டுள் ளது. ஆனால் முக்கிய எதிர்க்கட்சியாகிய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் மகாசங்கமும் ஒரு பக் கம் நிற்கும்பொழுது ஐ. தே. க.யின் பலமென்பது (இனப்பிரச்சனையில்) மிகவும் சர்ச்சைக்குரியதே. சு. க. வைத் தோற்கடிப்பதில் ஜே. ஆர். பல நடவடிக்கைகளை எடுத்திருந்தார் - முதலில் ஸ்ரீ மா வின் குடியுரிமையினைப் பறிப்பதற்கான ஒரு பரீட்சார்த்தமாக பீலிக்ஸின் குடியுரி மையைப் பறித்தார். அதற்குப் பெரிய எதிர்ப்புக் கள் கிளம்பவில்லை. பின்பு சு. க. வில் ஜே. ஆருக் குச் சமதையாக போட்டியிடக் கூடிய ஸ்ரீமாவின் குடியுரிமையைப் பறித்தார். இதனைத் தொடர்ந்து கட்சித்தலைமைக்கான போட்டியில் சு. க. பலதுண் டங்களாக உடைந்தன. மொத்தத்தில் சு. க. வினைப் பலவீனப்படுத்துவதில் ஜே. ஆர். வெற்றி கண்டார்.

அடுத்து ஜே. ஆர். தன்னைப் பலப்படுத்து வதற்கு இராணுவத்தில் தனக்கு ஏற்ற தலைமைப் பீடத்தினை உருவாக்குவதில் ஈடுபட்டார். ராணு வத்தின் உயர் பீடத்தில் ஆறாவது இடத்திலி ருந்த தனது நெருங்கிய உறவினராகிய வீரதுங் காவை ராணுவத் தளபதியாகப் பதவி உயர்த்தி, பின்பு முப்படைகளின் கூட்டுத் தளபதியாக்கி னார். அதேவேளை கொழும்பு றோயல் கல்லூரியில் கல்விகற்ற தனது நம்பிக்கைக்குரிய பலரைக் குறுகிய காலத்தில் பயிற்சியளித்து ராணுவ நிர் வாகஸ்தர்களாக அமர்த்தினார். இவற்றுக்கு மே லாக தனது மகனின் தலைமையில் 'கொமாண் டோ' பொலிஸ் பிரிவை (S.T.F.) உண்டாக்கி அதனை ஆயுதம் தரித்த இன்னொரு சக்தியாக மாற்றியுள்ளார். மேலும் கட்சிக்குள் விசுவாசி யாகிய லலித்தினை தேசிய பந்தோபஸ்து அமைச் சராக்கினார். லலித்திடம் தேசிய பாதுகாப்பு அமைச்சினை வழங்கினாலும் அவர் கூடத் தன்னை மீறக்கூடாது என்பதற்காக ராணுவத்திற்கு ஆள் திரட்டுவதையும், பயிற்சியளிப்பதையும் தனது மருமகனை ரணில் விக்கிரமசிங்காவின் பொறுப் பிலே விட்டுள்ளார்.

இவ்வாறு சு. க. வைப் பலவீனப்படுத்தி ராணுவத்தினைத் தனக்குச் சாதகமாக மாற்றிய மைத்துப் பலப்படுத்திய பொழுதும் இனப்பிரச் சினையின் மத்தியில் இவற்றினையும் மீறி ஒரு பல வீனமானவராகவே ஜே. ஆர். காணப்படுகிறார். பொருளாதாரப் பிரச்சினைகளை திசை திருப்பவும், சு. க. வைத் தோற்கடிக்கவும் ஜே. ஆர். இனப்பிரச்சினையை ஓர் ஆயுதமாக கையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ண்டு வந்தார். இந்நிலையில் ஜே. ஆரினுல் பல வழிகளிலும் தோற்கடிக்கப்பட்ட சு. க., ஜே. ஆர். கையாண்டு வந்த அதே வழியைக் கையாண்டு தன்னை மீண்டும் அதிகாரத்திற்கு கொண்டு வருவதற்கு முயற்சிக்கிறது.

எனவே மகாசங்கத்தின் துணையோடு ஸ்ரீ. ல. சு. கட்சி இனப்பிரச்சினையைக் கையிலெடுத்து வெளியில் வரும்பொழுது ஐ. தே. கட்சிக்குள்ளிருக்கும் பா. உ. க்கள் கூட ஐ. தே. கட்சியின் மேல்மட்டத்தினை நெருக்கடிக்குள்ளாக்குவர். இந்நிலையில் ஜே. ஆர். எவ்வளவுதான் சமரசம் செய்து பிரச்சினையைத் தணித்து ஆட்சி அதிகாரத்தினை ஸ்திரப்படுத்த வேண்டுமென நினைத்தாலும் அது மிகவும் கடினமானதாகவே காணப்படுகிறது. எனினும் ஜே. ஆர் இதனைக் கடந்து வெற்றி கொள்வதற்கான நடவடிக்கைகளை நாம் கவனத்திலெடுக்கவேண்டும். அரசியல் நெருக்கடிகள் தொடர்பில் ஜே. ஆர். இடம் இருக்கும் ஒரு பொதுப்பண்பு பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதல்ல; பிரச்சினைகளைத் தள்ளிப்போடுவதேயாகும். இவ்வகையிலே எமது பிரச்சினையை ஜே. ஆர். கையாள்வதற்கு சில நடவடிக்கைகளை மேற்கொள்கிறுர். பிரச்சினைகளை பின்போடுவதன் மூலம் அப் பிரச்சினையானது தனக்குள்ளேயே நெருக்கடிக்குள்ளாக்கி சில வேளைகளில் தன்னியல்பாகவே சீரழிந்துபோகும். இந்த வகையில் தமிழர் பிரச்சினையை அரைகுறைத் தீர்வுக்கு தள்ளுவதன் மூலம் பின்போட்டு, தமிழ்ப் பேசும் மக்களுக்குள்ளேயே நெருக்கடிகளை தோற்றுவித்து அந்நெருக்கடிகளிலேயே அப் பிரச்சினை சீர்குலைந்துவிட வேண்டுமென்பது ஜே. ஆரின் நோக்கமாகும்.

1) தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையிலான பிரச்சினையைத் தோற்றுவித்தல்,

2) ஒரு தீர்வின் மத்தியில் கூட்டணிக்கும் ஆயுதம் தாங்கிய இளைஞர்களுக்கும் இடையில் மோதல்களை உருவாக்குதல்,

3) இடைக்காலத் தீர்வு என்பதன் பேரில் தீர்வினை ஏற்கின்ற, ஏற்காத இயக்கங்களுக்கு இடையில் மோதலை உண்டாக்குதல்,

4) மேலும் இந்திய அரசுக்கும் தமிழீழப் போராளிகளுக்குமிடையே மோதல்களைத் தோற்றுவித்தல்

போன்ற பல்வேறு தந்திரங்களின் பின்னணியில் இடைக்காலத் தீர்வானது, ஜே. ஆர். அளவில் அரசியல் தந்திரமானதும், புத்திசாலித்தனமானதுமாகும்.

ஜே ஆர். இன் தந்திரத்திற்குத் தடையாக அமைவது சு. க. வும் மகாசங்கமும்தான். இதனைக் கையாள்வதில் ஜே. ஆர். தன்னுலான சில முயற்சிகளைச் செய்கின்றுர் என்பதனை நாம் கருத்திலெடுத்தல் வேண்டும். ஜே ஆர். இன் இறுதித் தீர்வு மாகாண ஆட்சி வழங்குவதுதான் என்பது எமக்கு புரிகிறது. அதனை சு. க. எதிர்க்குமென்பதால்தான் அவ்வாறுன ஒரு தீர்வுக்கு வந்ததாக ஜே. ஆர். சொல்லாது தான் மாவட்ட சபையோடு நிற்பதாக சிங்கள மக்களுக்கு சொல்லிக்கொள்கிறுர். மாகாண சபையென்று எடுத்தவுடனேயே சொல்லிவிட்டால் எதிர்சக்திகள் எல்லாம் ஒருங்கமைந்து அதனைக் குழப்பிவிடுமென்பதால் பல தந்திரங்களைக் கையாண்டு காய்களை நகர்த்தி இறுதியில் மாகாண சபைகளை அமுல்படுத்தும் நிலைக்கு வந்துவிடவேண்டுமென ஜே. ஆர். விரும்புகின்றுர். இதனை அமுல்படுத்த சு.க.வை ஏதோ ஒருவழியில் சமாளித்துவிட்டால் ஜே. ஆரால் இதில் குறைந்தபட்ச வெற்றியை யீட்டமுடியும். சு. க.வைச் சமாளிக்க ஜே. ஆர் இந்தியாவின் உதவியைப் பெரிதும் நாடுகின்றுர். இந்நிலையில் சமரசம் தொடர்பாக இந்திய மத்திய அரசால் சு. க. வைச் சமாளிக்க முடியுமா அல்லது விலைக்கு வாங்க முடியுமா என்பது இங்குள்ள பிரதான கேள்வி. ஒருவேளை சு. க. வின் தலைமைப் பீடத்தினை வெற்றிகொள்ள முடிந்தாலும், சிங்கள மக்களை வெற்றிகொள்ள முடியுமா என்பது விஷேச கவனத்திற்குரியது.

மத்தியஸ்தம் வகிக்கும் இந்தியாவைப் பொறுத்தவரையில் அதன் மறுபக்கமாகிய கூட்டணியையும் இயக்கங்களையும் கையாள்வது இன்றைய நிலையில் இலகுவான விடயமாகவேயுள்ளது. பேச்சுவார்த்தை எங்கு நடக்கப்போகின்றது என்பது ஜே. ஆர். க்கும் ரஜீவுக்கும் தெரிந்திருந்தது. ஆனல் கூட்டணிக்கும், இயக்கங்களுக்கும் அது தெரிவிக்கப்படாமல் இருந்தது. கல்கத்தா டெலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராப் என்ற பத்திரிகையில் திம்புவில் பேச்சு வார்த்தைகள் நடைபெறவுள்ளது என்பதனை தெரிவித்த பின்புதான் கூட்டணியும் இயக்கங்களும் அதனை அறிந்து கொண்டன. மேலும் திம்புப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட தமிழ்ப் பிரதிநிதிகள் வெளியுலகுடன் தொடர்பு கொள்ள முடியாதவாறு இருந்ததாக "இந்தியா ருடே" என்ற பத்திரிகையில் கூறப்பட்டதனை ஞாபகப்படுத்தலாம். இவ்விரு உதாரணங்களையும் கொண்டு இந்தியாவால் கூட்டணியையும், இயக்கங்களையும் கையாள்வது எவ்வளவு இலகுவானதாக இருக்கிறது என்பது வெள்ளிடை மலையாக உள்ளது.

இந்தியா இரண்டு மாகாணங்களும் இணைந்த ஒரு மாநில ஆட்சியைத்தான் இலங்கை அரசிடம் முன்வைக்கும். ஆனால் இதனை இலங்கை அரசு வழங்கமுடியாத சூழ்நிலையில் இந்திய அரசிடம் இலங்கை அரசு அடையும் சரணாகதியிலும் அது வழங்கும் வாக்குறுதிகளையும் கருத்தில் எடுத்துக் கொண்டு இடைக்காலத்தீர்வாக மாநில ஆட்சி அமைப்புக்கு குறைந்த ஒன்றை ஏற்றுக கொள்ளுமாறு இந்தியா தமிழ் மக்களைக் கேட்கக்கூடும் என்ற சந்தேகம் எழுகிறது.

இறுதியாக பார்க்கும்பொழுது இந்திய மத்திய அரசு திம்பு பேச்சு வார்த்தையினை வெற்றிகரமாக முடிக்க விரும்புகிறது. அதற்காக அது அணுக வேண்டியதாக இருப்பது சுதந்திரக்கட்சி ஆகும் அது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பதில்தான் தங்கியுள்ளது. ஏனெனில் இலங்கை அரசும், கூட்டணி, இயக்கங்கள் அனைத்தும் இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் குறிப்பிடத்தக்க அளவுக்கு வந்துள்ளன.

இங்கு பேசப்படும் தீர்வுகள் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்க்க உதவாது. பொதுவாக இது தமிழ் மக்களைச் சீரழித்து ஜே. ஆர். எதிர்பார்க்கின்ற குழப்பத்தினை தமிழ் மக்கள் மத்தியில் உருவாக்கும். எனவே போராட்டத்தில் நம்பிக்கை வைத்து அதுவும் மக்கள் இயக்கமாக போராட்டத்தினை மாற்றி முஸ்லிம் மக்களின் பிரச்சனைகளுக்கும் விஞ்ஞானபூர்வமான ஓர் தீர்வை முன்வைத்து தமிழ்ப்பேசும் மக்கள்மத்தியில் ஐக்கியத்தினை உருவாக்கி மக்கள் அனைவரும் பங்கு கொள்ளக் கூடியவாறு போராட்டத்தினை அமைப்பதும், அதற்கான மார்க்கங்களையும் காண்பதுதான் இப்போதைய உடனடித் தேவையாகும்.

## ஹர்த்தால் - ஒரு கருத்து

குறித்தவொரு விடயத்தில் மக்களின் அனுதாபத்தை அல்லது எதிர்ப்பைக் காட்டுவதற்கோ, கவனத்தைக் குவிமையப்படுத்தி, மக்களின் உணர்வு விழிப்பை ஆழப்படுத்துவதற்கோ ஹர்த்தால் ஒழுங்கு செய்யப்படுவது நியாயமானது. ஆனால் மக்களின் நலனைச் சார்ந்து, ஒழுங்கானதாக அது திட்டமிடப்பட வேண்டும். கடந்த ஆடி 25, 26ஆம் திகதிகளில் ஹர்த்தால் நடைபெற்றது. அறிவிப்பிலுள்ள தெளிவீனங்களால் 27ம் திகதியும் ஹர்த்தால் தினமெனவே கருதி மக்களிற் பலர் குழம்பினர். அடுத்தடுத்து மூன்று நாட்களிற்கு நடைமுறை வாழ்வு ஸ்தம்பிதம் அடைவதைக் கருதி பெரும்பாலான மக்கள் அதிருப்தியேபட்டனர். கவனமாகச் சிந்தித்திருந்தால் 23ஆம் திகதியை மட்டுமே பொருத்தமான முறையில் ஹர்த்தால் தினமாக பிரகடனப்படுத்தி மக்களின் அதிருப்தியைத் தவிர்த்திருக்கலாம். முன்னொருமுறை சிறீலங்காவின் ஒடுக்குமுறை அரசு வட பிரதேசத் தமிழ் பேசும் மக்களின் நலனைக் கருத்திற் கொள்ளாமல், மூன்று நாள் ஊரடங்கு உத்தரவைத் திடீரென அறிவித்தது. மக்களிற்காய்ப் போராடும் விடுதலை இயக்கங்களும் அவ்வாறே நடந்துகொள்ள முடியுமா?

போக்குவரத்து வைத்தியத் துறைபோன்ற சேவைத் துறைகள் ஹர்த்தால் நாளிலும், மக்களிற்கு அத்தியாவசியமானவையாகவே இருக்கின்றன. இவற்றிற்கு ஊறு செய்வது மக்கள் விரோதப் போக்கேயாகும். கடந்த ஹர்த்தாலின்போது வைத்தியரொருவர் மறிக்கப்பட்டு, பதில் சொல்ல வேண்டிய நிலைமைக்கு ஆளானார். நாளாந்த உணவுக்கு கடைகளை நம்பியிருக்கும் மக்கள் கஷ்டப்படுவதுடன், கடைகளை நாடமுடியாது தடுக்கப்பட்டுள்ளனர். அன்றாட உழைப்பை நம்பியிருக்கும் ஏழைகள் எப்படிச் சேமிப்பது? மீன் விற்பனையாளர் சிலர் அத்தொழிலை அன்று மேற்கொண்டதற்காகத் தாக்கப்பட்டனர். நமது மக்களைப் பொறுத்தமட்டில் நாளாந்த உழைப்பை நம்பியிருப்போர் பலர். இப்படியானவர்களுக்குத் தொடர்ச்சியான ஹர்த்தால் பசியுடன் போராடுவதற்கே வழி சமைக்கிறது.

பரிசுத்தமான "ஓய்வு நாளில்" நோயாளியொருவனை யேசுக்கிறிஸ்து குணப்படுத்த முயன்றபோது அவர் ஓய்வு நாளை மீறியதாக, யூதகுருக்கள் குற்றஞ்சாட்ட நினைத்தார்கள். அதற்கு யேசு அவர்களைப் பார்த்து "ஓய்வு நாட்களில் நன்மை செய்வதோ தீமை செய்வதோ அல்லது ஜீவனைக் கொல்வதோ அழிப்பதோ எது நியாயம்? என்றார் இன்னோரிடத்தில் மனுஷன் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை; ஓய்வு நாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது." என்று அவர் கூறியதாகவும் "பைபிளில்" காணப்படுகிறது. எமக்கும் இவ்வாறு கூறத் தோன்றுகிறது.

தமிழ் பேசும் மக்களிற்காக ஹர்த்தால் நடாத்தப்பட வேண்டுமேயொழிய, ஹர்த்தாலுக்காகத் தமிழ் பேசும் மக்களல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்கள் - இராணுவம் நல்லுறவு ?

வசந்தன்

பதுங்குதலா அல்லது பின்வாங்குதலா என்ற குழப்பத்தினை தமிழ் மக்களின் பல அடுக்குகளில் கிளப்பிவிட்டிருக்கும் போர்நிறுத்தம் என்ற தோற்றப்பாட்டின் பின்னணியில் ராணுவம் - மக்கள் நல்லுறவு என்பது குறித்து சில குறிப்புகள் எழுதுவது முக்கியமாகிறது.

நீண்டகாலத்திற்கு முன்பு பொலிஸ் – பொதுமக்கள் நல்லுறவுக் குழுக்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அவை காலத்துக்குக் காலம் விளையாட்டுப் போட்டிகள், பந்தயங்கள் என்று நடாத்திக்கொண்டிருந்தன. அடிப்படையில் உளவு வேலையை 'நாகரீகமாக்கல்' அல்லது 'ஜனநாயகப்படுத்தல்' என்னும் கோட்பாட்டை ஒடுக்குமுறை அரசின் ஆயுதப்படைகள் செய்ய முற்பட்டதே இதனது மூலமாகும்.

எல்சல்வடோர், பிலிப்பைன்ஸ் போன்ற அமெரிக்காவின் கைப்பொம்மை நாடுகளைப் பொறுத்தவரை அமெரிக்காவிற்கு பெயரளவு ஜனநாயகமும் - செயலில் அராஜகமும் தேவையாகிறது. இந்த வகையில் மக்கள் - ராணுவம் நல்லுறவு போன்ற அம்சங்கள் ஒரு பரந்த பின்னணியில் நோக்கப்படவேண்டியவை.

எமது சூழலைப் பொறுத்தவரை உயர் அரசாங்க அதிகாரிகள், வங்கி உத்தியோகத்தர்கள் போன்ற பல்வேறு தரப்பினர் ஆயுதப்படையின் உயரதிகாரிகளோடு உத்தியோகபூர்வமாகத் தொடர்பு கொள்ள வேண்டிய சூழல் இருக்கிறது. இத்தகைய உறவுமுறை இன்றைய சூழலில் கத்தி முனையில் நடப்பது போன்றதாகும். ஏனெனில் நாளை அவ் உயரதிகாரிகள் இத்தகைய உறவுமுறைகளைப் பயன்படுத்தி "மக்களுடனான நல்லுறவு" என்ற பெயரில் தமது உளவு வேலைகளை மேற்கொள்ளவும் இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்வர்.

துணிவும், உறுதியும், அர்ப்பணிப்புணர்வும் மக்களுக்கான கடமையை இச் சூழலில் ஆற்றத் தயாராக இருக்கும் சிறீலங்காவின் அரச உத்தியோகத்தர்கள் வடக்கு கிழக்கைப் பொறுத்தவரை முக்கியமானவர்கள். அகதிகள் பிரச்சினை உணவுப் பிரச்சினை வேறும் பல பிரச்சினைகள் திடீரென ஏற்படுமிடத்து உடனடியாக இயன்றவரை உதவிபுரிவது என்பது ஒரு மிகவும் முக்கியமான பணி.

எமது உத்தியோகத்தர்களில் எத்தனை பேர் இவ்வாறானவர்கள் இருக்கிறார்கள்? 25 மைல்கள் பயணம் செய்து கொதிக்கும் வெயிலில் கால் கடுக்க 4 மணி நேரம் காத்திருந்து வந்த வயது போன மூதாட்டியை, வேலை நேரம் முடிந்தது; காசு எடுக்க ஏலாது, நாளைக்கு வா! என்று விரட்டுகிற மனிதாபிமானம் எங்களுடைய உத்தியோகத்தர்களுக்குத்தான் உள்ளது.

இத்தகைய உத்தியோகத்தர்கள், சில உயர் அரசாங்க அதிகாரிகள் இராணுவ அதிகாரிகளுடன் பழகும்போதுமட்டும் மிகவும் நாகரிகமாகவும், தமது அதிகாரங்களை அந்த இடத்திலேயே மறந்து போயும் பழகுகிறார்கள்.

ஒரு சின்ன உதாரணம்:

இராணுவ உயரதிகாரிகள், பிரஜைகள் குழுத் தலைவர்கள், அரசாங்க அதிபர் ஆகியோர் கலந்துகொண்ட ஒரு கூட்டத்தில் அப்பாவி மக்களை இராணுவத்தினர் சுடுவது பற்றி வினவப்பட்டபோது, இராணுவத்தைக் கண்டால் மக்கள் ஓடக் கூடாது, ஓடினால் பயங்கரவாதி என்ற சந்தேகம் கொண்டு சுடப்படநேரும் என்று ராணுவத்தினரின் சார்பில் பதில் தரப்பட்டது. இப்பதிலை உயர் அரசாங்க அதிகாரிஒருவர் உடனே ஆமோதித்து இராணுவத்தைக் கண்டால் மக்கள் ஓடக்கூடாது, ஓடினால் அவர்களைச் சுடுவது நியாயம். எனவே ஓடவேண்டாம் என்று அவர்களுக்கு தெரியப்படுத்தவேண்டும் என்று மேலும் விளங்கப்படுத்தினார்.

இத்தகைய முதுகெலும்பற்ற உத்தியோகத்தர்கள் ராணுவம்-பொதுமக்கள் நல்லுறவு என்று முன்வருகிறபோது நிறையச் சிக்கல்கள் எழுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் யாழ் குடாநாட்டின் ராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பிரிகேடியர் ஹமில்ற்றன் வனசிங்ஹ குருநகர் இராணுவ முகாமில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடாத்தினர் என அறிகிறோம்.

ஆரம்பத்தில் நளின் செனிவிரத்ண உயரதிகாரியாக இருந்தபோதும் இத்தகையதோர் மகாநாடு நடைபெற்றது. பொது மக்களுக்கும் ஆயுதப்படையினருக்கும் இடையேயான புரிந்துகொள்ளலை (?) வளர்த்தல் என்பதற்காகவே இத்தகைய மகாநாடுகள் ஏற்பாடு செய்யப்படுவது வழக்கம். ராணுவமும் மக்களும் பரஸ்பரம் அந்நியப்பட்டுப்போன நாடுகளில் இவ்வாறான முயற்சிகள் காலத்துக்குக் காலம் நிகழ்வது வழக்கம். சிறீலங்காவைப் பொறுத்தவரை ஐந்து அல்லது ஆறு உயரதிகாரிகள் மட்டுமே 'ஆங்கில நாகரீகத்துக்கூடான ராணுவப் பயிற்சி'களைப் பெற்றவர்கள். அதாவது அப்பாவி மக்களைச் சுடுவது, உயர்ந்த ஒழுக்கம் மிக்க ஆயுதப்படையின் பண்பு அல்ல என்பதையாவது குறைந்த பட்சம் விளங்கிக்கொள்பவர்கள். இந்த ஐந்து ஆறு பேரை விட்டால் மீதி அத்தனை பேரும் அரசின் பயங்கரவாதத்திற்கு பலியானவர்களே.

யாழ். குடாநாட்டிற்குப் பொறுப்பாக அனுப்பப்பட்டுள்ள பிரிகேடியர் வனசிங்ஹ 1958 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் கடமை புரிந்தவர். அதன் பிறகும் அடிக்கடி யாழ்ப்பாணத்தோடு தொடர்புகள் வைத்திருந்தவர். இவரை யாழ்ப்பாணத்திற்கு உயரதிகாரியாக மாற்றம் செய்தமை முக்கியத்துவம் வாய்ந்ததாக அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

எமது நோக்கம் வடபகுதியிலுள்ள நெருக்கடி நிலையைத் தணிப்பதே ஆகும் என்று பத்திரிகையாளர்களிடம் அவர் தெரிவித்துள்ளார். அரசாங்கம் எடுத்து வரும் இராணுவரீதியான நடவடிக்கைகளால் தேசிய இனப்பிரச்சினையை தீர்த்து விடமுடியாதென்று தான் நம்புவதாகவும் அதே நேரம் அரசியல் தீர்வுக்கு முயற்சிப்பது அரசியல்வாதிகளுடைய பணி என்றும் மேலும் தெரிவித்தார்.

**'மக்களை வென்றெடுப்பது' என்பதை எந்த ஒரு காலகட்டத்திலாவது எந்த ஒரு வெறும் ராணுவமாவது செய்ததாக வரலாறு இல்லை.**

தேசிய இனப் பிரச்சினையை அதனுடைய சகல பரிமாணங்களிலும் விளங்கிக் கொள்ளக் கூடிய சிறீலங்கா இராணுவ அதிகாரிகளாலும் பலன் ஏதுமில்லை. ஏனெனில் சாதாரண சிப்பாய்களுக்கும் உயரதிகாரிகளுக்குமிடையில் பெரிய இடைவெளி நிலவுகிறது. உயரதிகாரிகள் ஹெலிகொப்டர்களைப் பாவிக்கும் அதேவேளை சாதாரண சிப்பாய்களோ தெருவில் வந்து கண்ணிவெடிக்குள் சிக்கி கைவேறு கால்வேறாக மரணிப்பவர்கள் மரணத்தின் பின் மட்டுமே ஹெலிகொப்டர் அல்லது விமானப் பயணம் அவர்களுக்கு வாய்க்கிறது. மேலும் சிப்பாய்களில் பெரும்பாலானோர் பின் தங்கிய சிங்கள நாட்டுப்புறங்களிலிருந்து பெறப்பட்டவர்கள். உயரதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் பெரும்பாலும் கொழும்பு, கண்டி சார் மேட்டுக் குடியினர். இந்த வகையிலும் சிறீலங்கா ஆயுதப்படை தன்னுள் முரண்பாடானதாக இருக்கிறது. சிங்கள பௌத்தனை இல்லாத எந்த ஒரு உயரதிகாரியாலும் தனது சிங்கள பௌத்த சிப்பாய்களை கட்டுப்படுத்துவது அசாத்தியமாகவே இருக்கிறது. மன்னார் சம்பவங்களின் போது இணைப்பதிகாரியாக இருந்த கேணல் மார்க்ஸ் பிலிப்ஸ் எனும் கத்தோலிக்கப் பறங்கி இனத்தவர் அறைக்குள் வைத்துப் பூட்டப்பட்டது மட்டுமன்றி சிப்பாய்களைத் தடுத்து நிறுத்தினால் கொல்லப்படுவார் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளார். மேலும் அண்மைக் காலங்களில் முள்ளியவளையில் டி. வி. பார்த்துக்கொண்டிருந்தவர்கள் மீது சாதாரன சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததனல் (15 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர்) அதனைத் தடுத்த இராணுவவீரர் சகவீரர்களினல் சுட்டுக் கொல்லப்பட்டு "பயங்கரவாதிகளால்" (ஆயுதமேந்திய இளைஞர்கள்) சுட்டுக்கொல்லப்பட்டதாக தேசிய பாதுகாப்பு அமைச்சினால் அறிவிக்கப்பட்டது.

இத்தகையதொரு பின்னணியில் அத்துலத் முதலி, ஆனந்ததிஸ்ஸ டீ அல்விஸ் போன்ற அமைச்சர்கள் ஆயுதப்படையினர் மத்தியில் தாம் பிரபலமாகவும், பலமாகவும் இருக்க வேண்டும் என்பதற்காக ஆயுதப்படையினரை நியாயப்படுத்தவும், அவர்களை சிறீலங்காவின் தேசியவீரர்களாகச் சித்தரிக்கும் முயற்சிகளிலும் மிகவும் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

பிலிப்பைன்ஸ், தாய்லாந்து போன்ற நாடுகள் போல் சிறீலங்காவும் ராணுவத்தில் தங்கியிருக்கும் நாடாக மாறிவிட்டது. ஒரு நலன்புரி அரசி

(12ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் ஒடுக்குமுறைகளில் நிலச்சூறையாடல்

செம்பாட்டான்

தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்குகின்ற ஒடுக்குமுறைகளில் மிகப்பெரியதும் முக்கியமான துமான ஒடுக்குமுறை நிலச்சூறையாடல் என்கின்ற குடியேற்றமாகும். தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதன் மூலம் அவர்களுடைய சொந்த மண்ணிலேயே அவர்களை அநாதைகளாக்கும் சூழ்ச்சிகளை மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மேற்கொள்கின்றன. இதன் மூலம் தங்களுடைய சிங்கள-பௌத்த பேரினவாதத்தை விஸ்தரிப்பதோடு எல்லைப புறங்களில் இருக்கின்ற சிங்கள, தமிழ் விவசாயிகள், உழைக்கும் வர்க்கங்கள் என்போரிடையே முரண்பாடுகளை வளர்த்துக் கொள்வதிலும் அவர்கள் வெற்றி கண்டனர்.

இக் குடியேற்றங்கள் அனைத்தும் மேலெழுந்தவாரியாக அல்லது ஒரு நிறுவனத் தன்மை வாய்ந்ததாக சிங்கள - பௌத்த மத நிறுவனங்களின் பெருமளவு ஆதரவுடனும், துணையுடனும் நடைபெறுகின்றன. இத்தகைய கொடூரத் தன்மை வாய்ந்த குடியேற்றங்கள் பின்வரும் வழிகளில் நடைபெறுவதை நாம் காணலாம்.

1. திட்டமிட்ட விவசாயக் குடியேற்றம்
2. சட்டவிரோத விவசாயக் குடியேற்றம்,
3. கைத்தொழில் குடியேற்றம்.
4. வியாபாரக் குடியேற்றம்.
5. மீனவர் குடியேற்றம்
6. முப்படையினருக்கான குடியேற்றங்கள்
7. புனித பிரதேசக் குடியேற்றம்.
8 தமிழ்ப் பிரதேசத்தை சிங்களப் பிரதேசத்துடன் இணைத்தல்.

அட்டவணை I:

## திட்டமிட்ட விவசாயக் குடியேற்றம்

இக் குடியேற்றங்களுக்கு உதாரணமாக அம்பாறை மாவட்டத்தில் கல்லோயாத் திட்டத்தையும், திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் அல்லைத் திட்டத்தையும், வவுனியா மாவட்டத்தில் பாவற்குள திட்டததையும், மன்னார் மாவட்டத்தில் கொண்டைச்சி மரமுந்திரிகைத் திட்டத்தையும் குறிப்பிடலாம்.

கல்லோயாத் திட்டம் 1941 ஆம் ஆண்டு அப்போது விவசாய அமைச்சராக இருந்த D S. சேனநாயக்காவால் கொண்டுவரப்பட்டது. இத் திட்டத்தின் மூலம் 44 குடியேற்றக் கிராமங்கள் அமைக்கப்பட்டன. இவற்றுள் 38 கிராமங்கள் சிங்களக் கிராமங்கள் ஆகும். இக்கிராமங்களுக்கு வெளிமாவட்டத்திலிருந்து சிங்களவர் கொண்டுவரப்பட்டு குடியேற்றப்பட்டார்கள். இக் குடியேற்றத் திட்டத்தில் 6 தமிழ் பேசும் மக்கள் கொண்ட குடியேற்றக் கிராமங்கள் அமைக்கப்பட்ட போதிலும் அவை, ஒன்றில் நீர்ப்பாசன வசதியற்றதாகவோ அல்லது அவற்றின் நீர்ப்பாசனம் சிங்களப் பகுதியினூடு செல்வதாகவோ இருந்தன. அம்பாறை மாவட்டத்தில் சிங்களவர் தொகை மிகப் பெருமளவு அதிகரிப்பதற்கு முதன்மையானகாரணியாக அமைந்தது கல்லோயா அபிவிருத்தித் திட்டமேயாகும். கல்லோயா அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் 3000 ஆக காணப்பட்ட சிங்களவர் எண்ணிக்கை இன்று 1,46,371 ஆக அதிகரித்துள்ளது. இவ் அதிகரிப்பின் வேகத்தை அம்பாறை மாவட்ட வாக்காளர் பட்டியலிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். அட்டவணை ஒன்றைப் பார்க்கவும்:

| ஆண்டு | முஸ்லிம் வாக்காளர் | சிங்கள வாக்காளர் |
|---|---|---|
| 1947 | 37,000 | 2,394 |
| 1952 | 42,000 | 3,119 |
| 1956 | 44,000 | 3,905 |
| 1960 | 52,000 | 23,000 |
| 1965 | 57,000 | 31,000 |
| 1970 | 62,000 | 39,000 |
| 1977 | 68,000 | 46,000 |
| 1982 | 87,236 | 75,378 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வட்டவணையிலிருந்து சிங்கள வாக்காளர் தொகையின் அதிகரிப்பு வேகத்தை விளங்கிக் கொள்ளலாம். இவ்வாறான அதிகரிப்பினால் அம்பாறை மாவட்டத்தில் 3ம் நிலையிலிருந்த சிங்களவர்கள் 2ம் நிலைக்கு வந்துள்ளார்கள். தொடர்ந்தும் இதே வேகத்தில் அதிகரிக்குமானால் 1988க்குப் பின்னர் சிங்களவர்கள் Iம் நிலைக்கு வர முஸ்லிம்கள் 2ம் நிலைக்கும் தமிழர்கள் 3ம் நிலைக்கும் தள்ளப்படுவார்கள். இத்தகைய நிலை ஏற்படின் முஸ்லிம்கள் தங்களுடைய பிரதேசம் என்று கூறக்கூடிய வகையில் இருக்கும் அம்பாறை மாவட்டத்தை இழந்தவர்கள் ஆகிவிடுவார்கள்.

கல்லோயாத் திட்டத்தினாலும் கீழே காட்டப்படும் ஏனைய குடியேற்ற முறைகளினாலும் அம்பாறை மாவட்டத்தின் 2/3 பங்கினை சிங்களவர் ஆக்கிரமித்துள்ளார்கள். அம்பாறை மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு 1752.4 சதுர மைல்களாகும். இவற்றுள் 1005.9 சதுர மைல்கள் தனிச் சிங்களப் பிரதேசமாக மாறிவிட்டது. மீதி 746 5 சதுர மைல்கள் மட்டுமே தமிழ்பேசும் மக்களுக்கு சொந்தமாகவுள்ளன. இப்போது அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள், சிங்களவர் தமிழர் என்போரது தற்போதைய நிலையை பின்வரும் அட்டவணை விளக்குகின்றது.

அட்டவணை II:

| இனப்பிரிவு | சனத்தொகை | விகிதாசாரம் |
|---|---|---|
| முஸ்லிம்கள் | 161,481 | 41.6 |
| சிங்களவர் | 146,371 | 37.6 |
| தமிழர் | 78,315 | 20.01 |

கல்லோயாத் திட்டத்தைப் போல திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய், மொறவெவ, அல்லை, பதவியா போன்ற இடங்களில் திட்டமிட்டபடி விவசாயக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன கந்தளாய், மொறவெவத் திட்டத்தில் குடியேற்றப்பட்ட 2,300 குடும்பங்களில் முழுவதும் சிங்களவர்களாகவே இருந்தனர். அல்லையில் குடியேற்றப்பட்ட 500 குடும்பங்களிலும் கணிசமான அளவு சிங்களவர்கள் காணப்பட்டனர். பதவியாத் திட்டத்திலும் பெரும்பாலான அளவு சிங்களக குடும்பங்களாகவே இருந்தன. திருகோணமலை மாவட்டத்தில் அமைக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்கள் எல்லாவற்றிலும் பதவியாத் திட்டமே மிக அபாயகரமான திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் வடக்கு, கிழக்குத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. ஈழவிடுதலைப் போராட்டம் ஒரு காலத்தில் கூர்மையடையலாம் என்பதைக் கருத்தில் கொண்டு வடபகுதி மக்களிடமிருந்து கிழக்கு மக்களை அந்நியப்படுத்தும் சூழ்ச்சியாகவே இத்குடியேற்றம் அமைகிறது இன்று அரசின் குடியேற்றம் சம்பந்தமான முழுக் கவனமும் திருகோணமலை மாவட்டத்தில் இருப்பதற்கு திருகோணமலை மாவட்டம் வடக்கையும் கிழக்கையும் இணைக்கின்ற மாவட்டமாக இருப்பதும் சர்வதேச ரீதியாக கேந்திர நிலையமாக இருப்பதுமே காரணமாகும்.

திருகோணமலை மாவட்டத்தின் இத்தகைய திட்டமிட்ட குடியேற்றத்தாலும் ஏனைய குடியேற்ற முறைகளாலும் 1880களில் 935 ஆக இருந்த சிங்களவர் தொகை 1981ல் 86 341 ஆக அதிகரித்துள்ளது. 1981 புள்ளிவிபர அறிக்கையின் படி திருகோணமலையில் பெரும்பான்மை என்பது 402 நபர்களிடையே தங்கியுள்ளது. 1880களில் சிங்களவர்களிலும் பார்க்க 14 மடங்கு கூடியவர்களாக இருந்த தமிழர்கள் 1981 ல் அதாவது 100 வருடங்களுக்கிடையில் 402 நபர்கள் மாத்திரம் பெரும்பான்மையாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை சிங்களக் குடியேற்றங்களின் கொடூரத்தன்மையையே எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. இதனை 1881 தொடக்கம் 1971 வரையிலான திருமலை மாவட்டத்தின் குடிசன வளர்ச்சி அட்டவணையிலிருந்து நாம் இன்னும் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம். இதனை அட்டவணை மூன்றில் பார்க்கலாம்

## வருந்துகிறோம்

கடந்த வைகாசி [85] மாதத் தளிரில் ''வெளிநாட்டுப் பயணங்கள்'' எனும் ஆசிரியர் தலைப்பில் வெளிநாடு செல்வோரை கண்டித்து எழுதிவிட்டு, அட்டையில் 'பிரிந்தா ரவல் சேவிஸ்' (Air Agents) என்ற நிறுவனத்தின் விளம்பரம் போடப்பட்டிருந்தமையை பலர் நேரடியாகவும், கடிதம் மூலமும் சுட்டிக்காட்டியிருந்தனர். உண்மைதான்! இந்தத் தவறு எமது கவலையீனத்தால் ஏற்பட்டதே அன்றி வேறல்ல.

ஆசிரியர் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை III:

| ஆண்டு | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்தியத் தமிழர் | இலங்கை முஸ்லிம் | இந்திய முஸ்லிம் | பிறர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1881 | 935 | 14,394 | — | 5,746 | — | 1,112 | 22,197 |
| 1891 | 1,109 | 17,117 | — | 6,426 | — | 1,093 | 25,745 |
| 1901 | 1 203 | 17,069 | — | 8,258 | — | 1,911 | 28,441 |
| 1911 | 1,138 | 16,913 | 320 | 9,5?9 | 185 | 1,470 | 29,755 |
| 1921 | 1,496 | 18,138 | 448 | 12,662 | 184 | 1,179 | 34,112 |
| 1946 | 15,706 | 30,433 | 3,362 | 22,136 | 1,083 | 3,206 | 75,926 |
| 1953 | 15 296 | 34,035 | 3,482 | 27,748 | 868 | 2,204 | 83,917 |
| 1963 | 39.950 | 51,060 | 2,990 | 41,950 | 610 | 1,660 | 1,38,220 |
| 1971 | 55,308 | 67,516 | 5,739 | 60,698 | 840 | 1,888 | 1,91,989 |
| 1981 | 86,341 | 86 743 | 6,767 | 74,403 | | 2,531 | 2,56,790 |

வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரை அங்கு மைத்திரிபால சேனநாயக்காவால் உருவாக்கப்பட்ட பாவற்குள குடியேற்றத் திட்டமே திட்டமிட்ட விவசாயக் குடியேற்றமாகும். இக்குடியேற்றத் திட்டத்தின் 6 யூனிட்டுக்களிலும் ஏராளமான சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இதுபோலவே மன்னார் மாவட்டத்தில் கொண்டைச்சி என்னும் இடத்தில் பரமுந்திரிகைச் செய்கைக்காக 500 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்களவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

## சட்ட விரோத விவசாயக் குடியேற்றம்

இவ்வகையான அத்துமீறிய குடியேற்றங்கள் அம்பாறை, திருகோணமலை, வவுனியா மன்னார் மாவட்டங்களில் பரவலாக நடைபெறுகின்றன. இதில் புத்த பிக்குகளே கூடுதலாகப் பங்குபற்றுகிறார்கள். இவர்கள் தமிழ் பேசும் மக்களுடைய பிரதேசங்களில் புத்தசிலைகளைக் கொண்டு வந்து வைப்பதும், சில இடங்களில் சமய ஆசாரச் சின்னங்களைத் தாமே கொண்டு வந்து புதைத்துவிட்டு சிலகாலம் சென்றபின் அப்பிரதேசம் தமக்குரியது என்று வாதாடுவதும், குடியேற்றப்பிரதேசங்களில் கலகங்களை ஏற்படுத்திச் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களை அநாதைகளாக்கி அவ்விடங்களை ஆக்கிரமித்துக் கொள்வதும், தமிழ் பேசும் மக்களிடமிருந்து அரசாங்கம் சுவீகரித்து பொது நோக்கங்களுக்காக பயன்படுத்தியபின் அரசினால் கைவிடப்பட்ட தமிழ்பேசும் மக்களின் காணிகளில் சிங்களவர்கள் அத்துமீறிக் குடியேறுவதும், தமிழ்பேசும் மக்களின் பிரதேசங்களிலுள்ள காடுகளில் அவற்றை அழித்துப் பலவந்தமாக அங்கு குடியேறுவதும் இன்று பெருமளவு அதிகரித்து வந்துள்ளது. இதற்குப் பாதுகாப்புப் படைகளும் அரசியற் பிரமுகர்களும் ஒத்துழைப்பு வழங்குவதும் அரசாங்கம் இது பற்றிய நடவடிக்கைகளில் மறைமுகமாக ஆதரவளிப்பதுமான நிலை தொடர்ந்து அதிகரித்துக்கொண்டு வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் தொட்டாற் சுருங்கி வட்டக்கண்டலில் கல்லோயாத் திட்டத்தின் மூலம் சுமார் 500 ஏக்கர் நெற்காணி 194 கண்டங்களில் 3 ஏக்கர் வீதம் தமிழ்பேசும் மக்கள் நீண்டகாலமாக விவசாயம் செய்துவந்தனர். இவர்களை புத்தங்கள விகாரைக்குப் பொறுப்பான தேரோவும் அவரைச் சேர்ந்தவர்களும் விவசாயம் செய்யவிடாது தடுத்தனர். இதனை எதிர்த்து கல்முனை நீதிமன்றத்தில் தமிழ்பேசும் மக்களால் 30-9-1981ல் வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கின் ஆதாரங்களை பரிசீலனை செய்த நீதிபதி தேரோவும் அவரது கூட்டத்தினரும் இதில் ஆட்சி செய்யக்கூடாது என தடை உத்தரவு பிறப்பித்துள்ளார். எனினும் அபாயம் முற்று முழுதாக நீங்கிவிடவில்லை.

இதேபோல வவுனியா மாவட்டத்தில் கொக்கச்சான் என்ற இடத்திலும், மன்னார் மாவட்டத்தில் மடுரோட்டிலும் திருமலைக் காடுகளிலும் அத்துமீறிக் குடியேற்றங்களை ஏற்படுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியுள்ளனர். காடுகளில் குடியேற்றும் போது தந்திரோபயமாக நடந்துகொள்கின்ருர்கள். முதலில் ஒரு புத்த பிக்கு பத்துப்பேருடன் வருவார். காடுகளில் நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களுக்கு அருகில் ஒரு புத்த கோவிலைக் கட்டுவார். கோவிலைச் சுற்றி பத்துப்பேருக்கான குடிசைகள் கட்டப்படும். பின்னர் பத்துப் பேரின் குடும்பங்களும் குடிசைகளுக்கு இடம்பெயரும். தொடர்ந்து அவர்களின் உறவினர்கள், தெரிந்தவர்கள் என்போர் வந்து குடியேறுவார்கள். ஈற்றில் அது ஒரு சிங்களக் கிராமமாக பரிணமிக்கும். பிக்குகள் சிங்களப் பாடசாலைகள், சிங்களக் கடைகள் என்பவற்றை தம் அரசியல் செல்வாக்கு மூலம் உருவாக்குவார்கள். அக்காட்டுக்கருகில் தமிழ்பேசும் மக்களின் கிராமங்கள் இருப்பின் அவர்களைப் பயமுறுத்தி, கலகங்களை உருவாக்குவார்கள். ஆயுதப்படைகளும் அரசும் இவர்களின் முயற்சிக்குப் பக்கபலமாக நிற்கும். இறுதியில் தமிழ்பேசும் மக்களின் கிராமங்களிலிருந்து அவர்களை அப்புறப்படுத்திவிட்டு, தாமே அக்கிராமத்தையும் ஆக்கிரமித்துக் கொள்வார்கள். இத்தகைய போக்கு வவுனியாவில் கொக்கச்சானிலும் கல்குடாவின் எல்லைப்பகுதியான வடமுனையிலும் நடைபெறுவதை நாம் அவதானிக்கலாம். வவுனியாவிலுள்ள கொக்கச்சானில் 1981 ஆவணியில் குடியேறச் சென்ற தமிழர்கள் லொறிகளிலும் உழவு யந்திரங்களிலும் வந்த சிங்களக் காடையர்களினுல் அடித்து விரட்டப்பட்டனர். இதேபோல கல்குடாவின் எல்லைப்புறமான வடமுனையில் அத்துமீறிக் குடியேறிய சிங்களவர்களினுல் 300க்கு மேற்பட்ட தமிழ், முஸ்லிம் குடும்பங்கள் வட முனையைவிட்டு வெளியேறியுள்ளன. குடியேற்றக்காரர்களை குடியேற்றுவதற்கு மகாவலி அபிவிருத்தி அமைச்சின் வாகனங்கள் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டன. தமிழ் அகதிகளுக்கென வெளிநாடுகளிலிருந்து வழங்கப்பட்ட கூடாரங்கள் இவர்களுக்கு வழங்கப்பட்டன. இதுவரை 40,000 பேர் வடமுனையில் குடியேறியுள்ளனர் என, தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவற்றினை விட அரசாங்கத் தேவைக்கென அல்லது புனித பிரதேசத்துக்கென அல்லது வேறு பொது நோக்கங்களுக்கென தமிழ்பேசும் மக்களிடமிருந்து, காணிகளை முதலில் சுவீகரித்து சிலகாலம் சென்ற பின்னர் அவற்றை மக்களுக்கே திருப்பிக் கொடுக்கப்படுவதாகக் கூறி, சிங்கள மக்களுக்கு மட்டுமே முழுவதும் கொடுக்கப்படுகிறது. இதற்கு உதாரணமாக அம்பாறை மாவட்டத்தில் நரைச்சோலைக்கண்டப் பிரச்சினையையும் திருமலை மாவட்ட சேருவல தொகுதி செல்வநகர் பிரச்சினையையும் குறிப்பிடலாம். 1965ம் ஆண்டு அம்பாறை மாவட்ட நரைச்சோலைக்கண்டத்தில் 1000 ஏக்கர் நிலம் கரும்புச்செய்கைக்காக சுவீகரிக்கப்பட்டது. தற்போது இதில் கரும்புச்செய்கை கைவிடப்பட்டு 55 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. இதேபோல சேருவல தொகுதியில் சேர்க்கப்பட்ட செல்வநகர் முஸ்லிம் கிராமத்தைச் சேர்ந்த 108 முஸ்லிம் விவசாயிகளுக்கு சொந்தமான 496 ஏக்கர் நெற்காணிகளை ஒரு மாதப் பயிருடன் பறித்து கடந்த 30-11-85 அன்று களனித் தொகுதியைச் சேர்ந்த சிங்கள மக்களுக்கு விநியோகிக்க முயற்சி எடுக்கப்பட்டது. இது பொதுமக்களின் தீவிர முயற்சியால் நிறுத்தப்பட்டிருந்தாலும் கூட அவை பறிக்கப்படும் அபாயம் இன்னும் நீங்கிவிடவில்லை.

(தொடரும்)

---

8ம் பக்கத் தொடர்ச்சி

## பொதுமக்கள் - இராணுவ...

லிருந்து, போர் புரி அரசாக (From Welfare State to Warfare State) மாறியிருக்கும் சிறீலங்காவில் ஆளும் ஐ. தே. கட்சியின் முக்கிய சக்திகளுக்கிடையேயான போட்டி இப்போது யார் கூடுதலாக இராணுவத்துள் செல்வாக்கு மிக்கவர்களாக இருக்கிருர்கள் என்பதற்கவே ஆகும்.

இத்தகைய போக்கு தவிர்க்க இயலாதவாறு பாகிஸ்தான், பங்களாதேஷ் பாதையில் சிறீலங்காவைக் கொண்டு செல்லும். இந்த வரலாற்றில், பொதுமக்களுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ள முயற்சி எடுக்கும் இராணுவத்தினர் என்பது உன்னதமான நகைச்சுவையே அன்றி வேறல்ல.

♥ ♥ ♥



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தீவு

# தோட்டத் தொழிலாளரைப் பற்றிய பொய்மைகளும் உண்மைகளும்

மாவலியான்

தொடர்: ஐந்து

## (9) தேசியமயமாக்கப்பட்டதன் பின்னர் உருவாகியுள்ள புதிய பிரச்சினைகள்

நிலச்சீர்திருத்தம், காணிப் பங்கீடு, 'நட்சா' பன்முகப்படுத்தப்பட்ட பொருளாதாரம், கிராமிய தோட்ட ஒன்றிணைப்பு, காடு வளர்ப்பு போன்ற வெற்றிபெறாத பல்வேறு திட்டங்கள் மூலம் மலையகத் தொழிலாளரை அழித்தொழிக்கும் வேலையைத்தான் இரு அரசாங்கங்களும் செய்து வருகின்றனவோ என்ற ஐயம் பலர் மத்தியில் இன்று எழுந்துள்ளது.

காணிப் பங்கீடு என்ற பெயரில் சொய்சி தோட்டத் தொழிலாளரை பலாத்காரமாக அன்றைய அரசாங்கம் வெளியேற்றி விட்டு கிராம வாசிகளுக்கு கொலனி ஒன்று அமைத்துக் கொடுத்தது. இங்கு குடியேறியவர்களின் நிலைமை மிகவும் பரிதாபகரமாக உள்ளது. தேசிய உற்பத்திக்கு இக்குடியேற்றத்தினுல் எந்தப் பங்களிப்பும் கிடையாது. அந்த வளமான தேயிலைத் தோட்டம் அழிக்கப்பட்டது. மலையகத் தொழிலாளர் அநாதரவாகத் தெருவில் விரட்டி அடிக்கப்பட்ட கொடுமையும் மாத்திரமே ஏற்பட்ட விளைவாகும். இவ்வாறு பலாத்காரமாக வெளியேற்றப்பட்ட தோட்டத் தொழிலாளரின் எதிர்காலத்தைப் பற்றி எந்தவொரு ஏற்பாடும் செய்யப்படவில்லை. அவர்கள் தெருத்தெருவாக பிச்சை வாங்கி அலைந்தனர்.

டெவன் தோட்டத்தை கொலனியாக்குவதற்கு முன்னைய அரசாங்கம் மேற்கொண்ட முயற்சி தோட்டத்தொழிலாளர் காட்டிய எதிர்ப்பினுல் பின்போடப்பட்டது. பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு சிவனு லட்சுமணன் என்ற தொழிலாளி பலியானுர். ஆனுல் இன்றளவும் அந்நிலம் கைவிடப்பட்ட நிலையிலேயே உள்ளது.

நட்சாத் திட்டத்தின் கீழ் இவ்வாறு பல ஆயிரக்கணக்கான ஏக்கர் தேயிலைத் தோட்டங்கள் கொலனிகளாக மாற்றப்பட்டுள்ளன. இன்செல்லாம் தேசியவருவாய்தேடித்தந்த தேயிலைத் தோட்டங்கள் பல கிராமவாசிகளுக்கு 2ஏக்கர் வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன இவை சரியான பராமரிப்பின்றி உற்பத்தித்திறனை இழந்து வருகின்றன. இவற்றில் வேலைசெய்த தொழிலாளர்கள் பொலிஸ் பலத்தாலும் வன்செயல் தூண்டப்பட்டும் (உ-ம்நாவலப்பிட்டிய, சபரகல்ல) பலாத்காரமாக அப்புறப்படுத்தப்பட்டனர்.

தற்போது இந்த அரசாங்கம் வெவ்வேறு பெயர்களில் இதே விதமான காரியத்தை நாசூக்காக செய்து வருகின்றது. மாதிரிக்கிராமம் என்ற பெயரில் தேசிய இன உறவுகளைப் பாதிக்கக்கூடிய குடியேற்றங்களை நிறுவிவருகிறது.

காடுகளை மீள உருவாக்கும் திட்டம் என்ற கவர்ச்சிகரமான பெயரில் இதே காரியத்தை எவ்வளவு வெளிப்படையாகவும் நாசூக்காகவும் செய்து வருகிறது என்பதை கினிகத்தேனைக்கும் வட்டவளைக்கும் இடையில் சுற்றுலா செல்லும் எவரும் அறியமுடியும். காடு வளர்ப்புக்கென பல தோட்டங்கள் இப்பகுதியில் கைவிடப்பட்டன. தோட்டத்தொழிலாளர் பல்வேறு விதமாக வெளியேற்றப்பட்டனர். ஆனுல் அங்கு காடுகளுக்குப் பதிலாக " அத்துமீறிய " கிராமவாசிகளின் குடியேற்றந்தான் புதிதுபுதிதாக முளைத்துக் கொண்டிருக்கின்றது.

நகரவிரிவாக்கத் திட்டம் கூட தோட்டப்புற நகரங்களை 'சிங்கள மயப்'படுத்தி வருகிறது. இன்று மலையக நகரங்கள் பல சிங்களமயமாக்கப்பட்டு விட்டன. இதற்கு நல்ல உதாரணம் மெனிக்ஹின்ன. இ நகரம் முன்னர் ஒரு 'தமிழ் நகர'மாகத் திகழ்ந்தது; 1958 வன்செயலில் இருந்து படிப்படியாக இந்நிலைமாறி 1977 வன்செயலுடன் கடைசித் 'தமிழ்முதலாளியும்' வெளியேற்றப்பட்டு விட்டார். இன்று இது 'தூய சிங்கள நகர'மாக மாறிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(II) முன்னர் தோட்டத்துறையில் துரை வெளிநாட்டவராகவும், கங்காணி, கணக்கப்பிள்ளை கிளார்க் அனைவரும் பெரும்பாலும் மலையகத் தமிழராக அல்லது தமிழ் பேசும் தேசிய இனங்களாக இருந்தனர். இதனால் தோட்டத் தொழிலாளருக்கும் நிர்வாகத்திற்கும் இடையே ஏற்பட்ட சகல பிணக்குகளும் தகராறுகளும் வகுப்புவாதத்தை தோற்றுவிக்கவில்லை. ஆனால் இன்று நிலைமை மாறிவருகிறது. தற்போது தோட்டத் துரையாக - அரசியல்வாதிகள், அரசியல்வாதிகளுடன் நேரடித்தொடர்புடையவர் அல்லது அரசியல்வாதிகளின் நெருங்கிய உறவினர்கள் (பெரும்பாலும் சிங்களவர்கள்) நியமிக்கப்படுகின்றனர். சுப்பவைசர் போன்ற நேரடியாகத் தொழிலாளரைக் கையாளும் பதவிகளும் சிங்களவர்களில் இருந்தே நிரப்பப்படுகின்றன. இதனால் தொழிலாளருக்கும் நிர்வாகத்திற்கும் இடையே நிகழும் சாதாரண தொழிற்தகராறு கூட இனவாதச் சாயம் பூசப்பட்டு தோட்டத்திற்கு வெளியேயுள்ள சிங்களமக்களைத் தூண்டிவிட்டு தோட்டத் தொழிலாளரைத் தாக்கும் அளவுக்கு பூதாகரமாகி விடுகிறது. இத்தகையது திஷ்டவசமான சம்பவங்கள் இன்று மலையகத்தில் சர்வசாதாரணமாக நடைபெறுகின்றன.

(III) தோட்டப்புறத்தில் நீண்டகாலமாக வாழ்ந்து நிரந்தரத் தொழிலாளராக மாறிவிடும் சிங்களமக்கள் இனவாதத்தைத் தூண்டும் பணியில் ஈடுபடுவதில்லை. மாறாக, தொழிலாளர் என்ற முறையில் ஐக்கியப்பட்டு சகல போராட்டங்களிலும் முன்னணி வகிக்கின்றனர்; சிலர் தொழிற்சங்கக் கிளைகளில் பதவிகளும் வகிக்கின்றனர். 1977 ஆகஸ்ட் வன்செயலின் போது இரத்தினபுரி பகுதியில் தோட்டக் கமிட்டித் தலைவராக இருந்த சிங்களத்தொழிலாளி ஒருவர், மலையகத் தமிழ்ப் பெண் ஒருத்தியைக் கற்பளிக்க முயன்ற தனது தம்பியை, தனது கையால் வெட்டிய, உணர்ச்சி ததும்பும் சம்பவம் ஒன்று நடைபெற்றது.

ஆனால் இன்று அரசாங்கம் திட்டமிட்டே கிராமவாசிகளை ''கைக்கூலி'' வேலைக்குத் தோட்டங்களில் பரவலாக ஈடுபடுத்தி வருகிறது. இவர்கள் கிராமத்தில் வாழ்கின்றனர். பெருந்தோட்டங்களில் பணிபுரிகின்றனர். நிரந்தரத் தோட்டத் தொழிலாளர் (சிங்களவர் உட்பட) வேலை நிறுத்தம் போன்ற போராட்டங்களில் ஈடுபடும் போது இவர்கள் கருங்காலிகளாக வேலையில் ஈடுபடுத்தப்படுவதுடன் தேசியவாதத்தால் ஆட்கொள்ளப்பட்டு ''சிங்கள'' நிர்வாகத்தைப் பாதுகாக்கும் பிற்போக்குப் பட்டாளமாகவும் பயன்படுத்தப்படுகின்றனர்.

## (10) சனத்தொகை

இலங்கையின் சனத்தொகை அதிகரிப்பு / வீழ்ச்சி பற்றிய விபரம் தேசிய இனத்தொகுதி வாரியாகக் கீழே தரப்பட்டுள்ளது.

1971ல் மலையகத் தமிழரின் தொகை சுமார் 12 லட்சம். இது, 1981ல் 8 லட்சமாக (30.96 வீதம்) குறைந்துள்ளது. ஏனைய தேசிய இனங்கள் 20 வீதத்திற்குக் குறையாமல் அதிகரித்துள்ளன. இந்த அதிகரிப்பு வீதத்தையும் கூட்டினால் 51 வீதம் மலையகத் தமிழரின் அதிகரிப்பில் வீழ்ச்சி காணப்படுகிறது. இதற்கான காரணமாக புள்ளி விபரத் திணைக்களம் பிரஜா உரிமை பெற்ற இந்திய தமிழர் இலங்கையர் கணிசமான தொகையினர், தம்மை 1981 குடிசன மதிப்பீட்டின் பாது இலங்கையர் எனக் கூறியதாக குறிப்பிடுகிறது. இலங்கைத் தமிழர் தொகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள அசாதாரண, நிகழமுடியாத, அதிகரிப்பை ஆராயும் போது இக்கூற்றில் உண்மை இருப்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் இந்த வீதம் (இலங்கைத் தமிழரின் அதிகரிப்பு வீதத்தில் இருந்து சராசரியைக் கழித்தால்) 12 வீதத்தைத் தாண்ட முடியாது. அவ்வாறு பார்த்தாலும் மலையகத் தமிழரின் சனத்தொகையில் 39% வீதம் வீழ்ச்சி காணப்படுகிறது.

இவ் வீழ்ச்சிக்கு ஒரு பிரதான காரணமாக ''ஸ்ரீமா-சாஸ்திரி'' ஒப்பந்தத்தின் கீழ் இவர்களில் பெருந்தொகையினர் நாடுகடத்தப்படுதல் இருந்தாலும் மற்றொரு முக்கிய காரணமும் இருக்கிறது. அதுதான் இந்தத் தேசிய இனத்தவரை அழித்தொழிக்கும் அரசாங்கத்தின் கொள்கை. நிர்வாகத்தின் மூலமும் தோட்ட டாக்டர்கள் மூலமும் (குடும்பத் திட்டத்திற்குள்ளாக்கும் ஒவ்வொரு தோட்டத் தொழிலாளருக்கும் தோட்ட டாக்டர்களுக்கும் அரசாங்கம் கமிசன் கொடுக்கிறது) தோட்டத் தொழிலாளர் மத்தியில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தீவிரமாக அமுல் நடத்தி வருகிறது. இதற்கு நல்ல உதாரணம் தங்கக்கெலே (தலவாக்கெலே பகுதியில்)

(20 பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாசியப் பிராந்தியத்தில் ஈழப் போராட்டம் சோஷலிஸப் பாதையின் திறவுகோல்

அகிலன்

இலங்கையில் ஈழப் போராட்டம் கூர்மையடைந்துவரும் இவ்வேளையில் இப் போராட்டம் பல்வேறு திசைகளிலும் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புகளையும், விளைவுகளையும் கவனத்தில் எடுப்பதோடு; இங்கு ஏற்படுத்தக்கூடிய ஆட்சியின் ஸ்திரப்பாடு என்பதையும் சிந்திக்கும்போது இத்தகைய ஓர் ஆய்வின் அவசியம் புலனாகும். எமது போராட்டத்தில் சர்வதேச சக்திகளின் செயற்பாடுகளைப் பற்றியும், அதன் சாதக, பாதக அம்சங்கள் பற்றியும் இங்கு கவனிக்கலாம். (1) தென் ஆசியப் பிராந்தியம் என்பது எது? (2) இப் பிராந்தியத்தின் அரசியல், பொருளாதார நிலைமைகள் எத்தகையன? (3) இப் பிராந்தியத்தில் வல்லரசுப்போட்டி எப்படிச் செயற்படுகிறது? (4) இவற்றின் பின்னணியில் ஈழப்போராட்டம் ஏற்படுத்தக்கூடிய பாதிப்பு என்ன? (5) ஈழத்து அரசின் தன்மை எவ்வாறு இருத்தல் கூடும்? என்பனபோன்ற வினாக்களுக்கு விடைகாண்பதன் மூலம் இவற்றை ஆராய முற்படலாம்.

தென், தென்கிழக்கு ஆசிய நாடுகள் என்ற வரையறைக்குட்பட்ட பகுதியாக, பாகிஸ்தான் தொடக்கம் பிலிப்பைன்ஸ்வரையில் நீண்டதொரு பிரதேசமும், பதினான்கு நாடுகளை உள்ளடக்கிய பிரதேசத்தையும் கொண்ட பரந்த பிராந்தியத்தைக் கருதலாம் இப்பகுதியில் 71ல் பங்களாதேஷ் என்ற புதிய தேசம் உருவாக 75ல் வட, தென் வியட்நாம்கள் இணைந்து ஒரே நாடாகின. இப்பிராந்தியம் ஏறத்தாழ 16ம் நூற்றாண்டு முதல் அந்நியர் ஆதிக்கத்திற்குட்பட்ட பகுதியாக காலனித்துவப்பிடியில் சிக்குண்டு 250 ஆண்டுகளுக்கும் மேலாகத் தவித்தது. உலக மகாயுத்தங்கள் தோற்றுவித்த தேசிய எழுச்சியும், அந்நியர் எதிர்ப்பு உணர்ச்சியும் இந் நாடுகளில் தேசிய சக்திகளின் கைக்கு அரசியலதிகாரம் கிடைக்கக் காரணமாகின. 46ல் முதன் முதலில் பிலிப்பைன்சில் ஆரம்பித்து 57ல் மலாயா ஈறாக அனைத்து நாடுகளும் காலனித்துவ நுகத்தடியில் இருந்து தம்மை மீட்டுக்கொண்டன. அமெரிக்க, பிரான்சு, டச்சு, பிரித்தானிய ஏகாதிபத்திய விரிவாக்கத்திற்கு உட்பட்ட காலனிகளாக இருந்த இப்பிராந்தியத்தின் பெரும் பகுதி அபிவிருத்தியடையாமையினால், தமது எஜமான நாடுகளிலேயே பொருளாதார ரீதியாக தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

அதேவேளை அந்நியராதிக்கத்தால் உருப்பெற்ற ''நவீனமயப்படுத்தல்'' என்ற கருத்திற்கும், பாரம்பரியத்திற்கும் இடையில் வேறுபாடுகள் இங்கு பெருகலாயிற்று. பாரம்பரியம் என்பது சமயம், தனிமனித ஆளுமை அல்லது உரிமை, வழமை என்பவற்றில் மையமிட்டு நிற்க; அந்நிய மோகம், கவர்ச்சி, நவீனம் என்ற அடிப்படைகளில் நவீனமயப்படுத்தல் தங்கி நின்றது. மேலும் பொருளாதார ரீதியாக தாம் சார்ந்த காலனிநாடுகளில் தங்கியிருக்க வேண்டி ஏற்பட்டதோடு பெரும் வறுமையினை இப்பிரதேசங்களில் விட்டுச்சென்றது. அதாவது பெரும் மனிதத்தேவைகளுக்கு ஏற்ப கிடைக்கும் பற்றாக்குறையான வளங்களை ஒழுங்கு முறையில் உபயோகப்படுத்தாமையே இங்கு வறுமை நிலவ அச்சாணியான காரணமாகும்.

இப் பிராந்தியத்தின் சமூக, அரசியல், பொருளாதார நிலைமைகள் குறித்து நுணுகி ஆராய்ந்து பார்ப்பது எடுத்த நோக்கத்தை திசைதிருப்பக்கூடும். எனினும் மேலெழுந்தவாரியாகப் பார்க்குமிடத்து இப்பிராந்தியத்தின் 14 நாடுகளில் ஏறத்தாழ 10 நாடுகள் அரசியல் ரீதியாக தமது ஜனநாயக உரிமையினை இழந்து உள்ளதைக் காணலாம். ஏகாதிபத்தியங்கள் கைவிட்டுச்சென்ற பின்னர் கிடைத்த அரசியல் அதிகாரம் சாதாரண உழைக்கும் மக்களுக்குச் சேவையாற்றும் சக்திகளிடம் கிட்டாமல் பூர்சுவா சக்திகளிடம் சிக்கியமையினால் பல நாடுகளும் சிறுபான்மையினர் பிரச்சினையை எதிர்நோக்கவேண்டி ஏற்பட்டது. இது பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவங்களைக் கொண்டிருக்கின்றது. அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் P. N. Pandey இவ்வாறான சிறுபான்மையினரை மூன்றுவிதமாக வரையறை செய்கிறார். ஒருவகையினர் தனிநாடு அல்லது சுயநிர்ணயம்பற்றிய கருத்தை நிராகரித்து தேசிய நீரோட்டத்தில் இணைந்திருந்தபோதும் தமது கலாசாரச் சின்னங்களைக் காப்பவர்கள். இத்தகையோருக்கு தாய்லாந்தில் சீனர்கள், இந்தியாவின் ஆங்கிலோ - இந்தியர், நேபாளத்தின் பௌத்தர்கள் போன்றோரைக் குறிப்பிடலாம். இரண்டாவது வகையினர், பிரிந்துபோகும் உரிமைபற்றி எண்ணியபோதும் எண்ணிக்கை, புவியமைப்பு, அரசியல் தலைமைத்தன்மை போன்றவற்றால் போராட்டத்தை முன்னெடுக்காதோர். இத்தகையோருக்கு இந்தியாவின் திண்டத்தகாதோர், பங்களாதேஷின் இந்துக்கள், பர்மா, மலாயா போன்ற நாடுகளில் வாழும் இந்தியர், சீனர்கள் போன்றோரைக் குறிப்பிடலாம். மூன்றாவது வகையினர் தமது சுய ஆட்சி, சுதந்திரம் சுயநிர்ணயம் பற்றி நன்கு அறிந்தவர்களாகவும், அதற்காகப் போராட்டத்தை முன்னெடுப்பார்களாகவும் உள்ளனர். இவ்வாறானோருக்கு உதாரணமாக இலங்கையில் தமிழர்கள், பாகிஸ்தானில் பதன்ஸ் மக்கள், பர்மாவில் உள்ள சன்ஸ், கயாஸ் இன மக்கள், பிலிப்பைன்சின் முஸ்லிம்கள் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

இவ்வாறுகச் சிறுபான்மையினர் பிரச்சினை ஒருபக்கம் இருக்க, ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்டு மக்களின் அங்கீகாரத்தைப் பெற்ற அரசுகள் இப்பகுதியில் சிலவேயாகும். இராணுவப் புரட்சிகளின் மூலம் அதிகாரத்தைப் பெற்றவர்களும், பரம்பரை ஆட்சிவழி அதிகாரத்தைப் பெற்றவர்களும் என்றவாறுக அரசியலதிகாரம் ஒரே இடத்தில் குவிந்துகிடக்கின்றது.

அடுத்துப் பொருளாதார ரீதியாக எடுத்துப்பார்த்தால் சொந்தவளங்களில் தங்கியிருந்து நாட்டை அபிவிருத்தி செய்தல் என்பதிலும் பார்க்க உலகவங்கி போன்ற பெரும் தாபனங்களின் உதவியிலேயே பெரும்பாலும் தங்கியிருக்கின்ற ஒரு நிலைமையினை அவதானித்தல் முடியும்.

காலனித்துவ ஆட்சி இப்பகுதியில் முறியடிக்கப்பட்டதையடுத்து, ஓர் "அரசியல் வெற்றிடம்" ஏற்பட்டுவிட்டதாக கற்பனைபண்ணும் அமெரிக்கா, இவ் வெற்றிடத்தின் ஊடாக சோசலிசம் புகுந்துவிடும் என அஞ்சுகின்றது. 1949ல் சீனவில் நிறுவப்பட்ட சிவப்பு அதிகாரமும், அதன் பின்னர் வியட்னாமின் விடுதலையும் அமெரிக்கா இவ்வாறு அச்சம்கொள்ள ஆதாரங்களாயிற்று. மேலும் ஏகாதிபத்தியத்தின் நேரடிப்பிடியில் இருந்து விடுபட்ட இந்நாடுகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் ஒரு புரட்சியாக அமையாது பரிணும மாற்றமாக அமைந்தமையும், இன்றுவரை இந்நாடுகள் ஏகாதிபத்தியத்தியத்தில் தங்கியிருக்கும் நிலைமையையும் பயன்படுத்தித் தமக்குச் சார்பான பொம்மையரசுகளை நிறுவ ஏகாதிபத்தியத்திற்கு வழி கொடுத்தது.

எனினும் "நேட்டோ" கூட்டணி உருவாகிய போது அதேபோன்ற ஒத்த தன்மைகளைக் கொண்ட சீட்டோ (Seato South East Asian Treaties Organisation) 'சென்டோ' இராணுவக் கூட்டணிகள் அமைக்கப்பட்டபோது இவை ஒழுங்காகச் சீராகச் செயற்படவில்லை. அல்லது நேட்டோவைப்போன்ற வலுவான ஒரு கூட்டாக இது மலரவில்லை.

இவ்வாறுக ஏகாதிபத்தியம் இப்பிராந்தியத்தைத் தன்பிடிக்குள் வைத்திருக்க எடுக்கும் முயற்சியின் அடித்தளத்தில்தான் இந்து சமுத்திரப்பிராந்தியத்தின் முக்கியத்துவம் புலனுகும். இந்து சமுத்திரம் எல்லாப் பருவகாலங்களிலும் பயணம் மேற்கொள்ளக்கூடிய ஒரு பிராந்தியமாக இருப்பதுடன், மேற்கையும் கிழக்கையும் இணைக்கும் போக்குவரத்துப் பாதையாகவும் உள்ளது. உலகின் கப்பற் போக்குவரத்தில் ஏறத்தாழ 2/3பங்கு இந்து சமுத்திரத்தினூடாக நடைபெறுகின்றது. அத்துடன் ஆசியா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா கண்டங்களை இணைக்கும் இக் கடல் பகுதியின் கரையோர நாடுகளில் உலகின் சனத்தொகையின் பெரும்பகுதியினர் வாழ்கின்றனர். மேலும் இக் கரையோர நாடுகளிலும், இந்துமாகடல் பகுதியிலும் காணப்படும் கனிப்பொருட்களின் வளங்களும் மிக அதிகமாகும்.

இத்தகைய முக்கியத்துவத்தின் அடிப்படையிலேயே இந்துமாகடல் பிராந்தியம் சமாதான மண்டலமாகத் திகழவேண்டும் என அணிசேரா நாடுகளும் இந்துமாகடல் கரையோர நாடுகளும் உலகின் சமாதான விரும்பிகளும் விரும்புகின்றனர். ஆனல் அமெரிக்காவும அதன் நேச நாடுகளும் டியாகோகார்சியாவில் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவத் தளத்தை நேரடியாக நிறுவியுள்ளதோடு கம்யூனிசப் பூச்சாண்டி காட்டி இப் பிராந்திய அரசுகளுக்கு எதிராக ஏற்படும் மக்கள் கிளர்ச்சிகளை அடக்கத் துணைபோகின்றது.

இதேவேளை உலக சோசலிச முகாமின் தலைமைப் பாத்திரத்தில் இருக்கும் சோவியத் யூனியனைப் பொறுத்தவரையில் அதன் நலன்களுக்கு இந்துமாகடல் பகுதி சமாதான மண்டலமாக இருக்கவேண்டியது அவசியமாகும். ஏனெனில் பால்டிக் கடலின் துறைமுகங்களில் உறைபனிக் காலங்களில் கட்டமுடியாத போர்க் கப்பல்களையும், ஏனைய கப்பல்களையும் சோவியத் யூனியன் ஆசிய பகுதித் துறைமுகங்களுக்கு கொண்டு செல்லும் போக்குவரத்து மார்க்கம் இப் பகுதியினூடாகவே அமைகின்றது. மேலும் ஐரோப்பாவின் கிழக்கேயுள்ள சோவியத் யூனியன் பகுதிகளையும், ஆசியாவின் பகுதியாக உள்ள சோவியத் யூனியன் பிரதேசங்களையும் இணைக்கும் போக்குவரத்துப் பாதைகளில் ஒன்றாகவும் இக் கடல் பகுதியே காணப்படுகின்றது.

எனவே இப்பகுதி அமைதிமண்டலமாக திகழ்வதை சோவியத் மனப்பூர்வமாக ஏற்கவேண்டிய நிலையில் உள்ளது.

ஆனால் 80ம் ஆண்டில் கொழும்பில் கூட்டப்படவிருந்த மாநாடு இன்னும் கூட்டப்படாமலும் இந்து சமுத்திரப் பகுதியில் தனது நலனை விரிவாக்குவதிலும் அமெரிக்கா முனைந்து நிற்கிறது. இப் பிராந்தியத்தில் வலிமைமிக்க நாடுகளில் ஒன்றான இந்தியா, சோவியத் யூனியனுக்கு ஆதரவாக இருப்பதாகவுமே, எதியோப்பியா சோவியத் பிடியில் இருப்பதையும் காரணம் காட்டும் ஏகாதிபத்திய சக்திகள் டியாகோ கார்சியாவில் மட்டுமன்றி வேறும் பல இராணுவத் தளங்களையும் நிறுவமுனைகின்றன. இதனால் இதற்கு எதிராக இந்துமாகடல் பகுதியை போர்மண்டலமாக மாறாமல் தடுக்க ராஜதந்திர மட்டத்தில் எடுக்கும் முயற்சிகள் முழு அளவில் பயனளித்தல் சந்தேகமே. எனவே சோவியத்தும், சோசலிச முகாமும் தமது நலன்களைப் பேணவேனும், இங்கு போராடும் மக்களுக்கு உதவவேண்டியேற்படலாம்.

தென்னாசியப் பிராந்தியத்தில் முனைப்புப் பெற்ற போராட்டங்களில் முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக இன்று ஈழப்போராட்டம் பரிணமித்துள்ளது. இலங்கையரசின் அராஜகத்தனமான செயற்பாடுகள் ஒருபுறமும், அமெரிக்க-இஸ்ரேலிய நலன்களோடு தம்மை இனங்காட்டி, இந்தியத்துணைக் கண்டத்தின் மீது பாராட்டும் பகைமையானது. இலங்கை அரசுக்கு எதிரான சர்வதேச அபிப்பிராயத்தை வளர்க்க உதவி வருவதோடு, சோசலிச முகாமின் ஆதரவையும் பெற்றுத்தரும் ஒன்றாகும். இப் பிராந்தியத்தில் முனைப்புப்பெற்ற ஏனைய போராட்டங்களைவிட ஈழப் போராட்டம் பல சாதகமான அம்சங்களைக் கொண்டுள்ளது (1) ஈழப் போராட்டத்தின் நியாயத்தையும், போராளிகளின் செயற்பாட்டையும் வரவேற்கும் உலக அபிப்பிராயம் (2) பலமான ஒரு பின்னணித் தளம் (3) இந்துமாகடல் பகுதியில் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் என்பன போன்ற அம்சங்கள் ஈழப் போராட்டத்தை வலுப்படுத்தும் முக்கிய காரணிகளாகும்.

இதேவேளை ஈழப்போராட்டம் தவிர்க்க முடியாதவறு ஏகாதிபத்திய எதிர்ப்பை உள்ளடக்கியிருப்பதோடு, உலக முற்போக்குமுகாமுடன் இனங்காட்ட வேண்டியுள்ளது. மசாசூசெட்சிலும், சோமர்வில்லியிலும் ''தமிழீழத்'' தீர்மானம் நிறைவேற்றி ஆர்ப்பரித்த சக்திகள் செல்வாக்கிழந்து செல்லாக்காசாகி வருவதையும். வெறுமையானதத்துவப் புத்தகத்திற்குக்கூட சிவப்பு அட்டை போட்டுக் காட்டும் போராட்ட சக்திகளையும் இந்தவகையிலேயே புரிந்து கொள்ள முடியும்.

இறுதியாக அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால், தென்னாசியப் பகுதியில் ஏகாதிபத்திய எதிர்ப்பை வலுப்படுத்தவும், தேசிய சிறுபான்மை இனங்களின் போராட்ட உணர்வை வளப்படுத்தி முன்னெடுக்கவும், சோசலிசப் பாதையை இப்பகுதியில் திறந்துவைக்கவும் ஈழப் போராட்டம் பயன்படும் என்பது நிச்சயம். அத்துடன் இந்தப்பகுதியில் புதிய சகாப்தம் ஒன்றின் நுழைவாயில் கூட ஈழப்போராட்டத்தின் வெற்றியிலேயே சாத்தியம். இந்த இடத்தில் இன்னுமொரு விடயத்தைக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டும். ஈழப் போராட்டத்தை இந்தியா கையாளும் விதம் குறித்து ஒரு அச்சமும்,

(22 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைபிளிலும்
# ஒரு
# 'யூதர் இனப்படுகொலை'

"... சீவான் மாதம் என்னும் மூன்றாம் மாதம் இருபத்து மூன்றாம் தேதியாகிய அக்காலத்திலேதானே ராஜாவின் சம்பிரதிகள் அழைக்கப்பட்டார்கள். மொர்தெகாய் கற்பித்தபடியெல்லாம் யூதருக்கும் இந்து தேசம் முதல் எத்தியோப்பியா தேசம் மட்டுமுள்ள நூற்றிருபத்தேழு நாடுகளின் தேசாதிபதிகளுக்கும், அதிபதிகளுக்கும், அதிகாரிகளுக்கும், அந்தந்த நாட்டில் வழங்கும் அட்சரத்திலும், அந்தந்த ஜாதியார் பேசும் பாஷையிலும், யூதருக்கும் அவர்கள் அட்சரத்திலும் அவர்கள் பாஷையிலும் எழுதப்பட்டது.

அந்தக் கட்டளைகள் அகாஸ்வேரு ராஜாவின் பேரால் எழுதப்பட்டு, ராஜாவின் மோதிரத்தினால் முத்திரைபோடப்பட்டபின், குதிரைகள் மேலும் வேகமான ஒட்டகங்கள் மேலும் கோவேறு கழுதைகள் மேலும் ஏறிப்போகிற அஞ்சற்காரர் கையில் அனுப்பப்பட்டது

அவைகளில் அகாஸ்வேரு ராஜாவுடைய எல்லா நாடுகளிலும் ஆதார் மாதம் என்கிற பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாந் தேதியாகிய அந்த ஒரே நாளிலே,

அந்தந்தப் பட்டணத்திலிருக்கிற யூதர் ஒன்றாய்ச் சேர்ந்து தங்களை விரோதிக்கும்சத்துருக்களாகிய ஜனத்தாரும் தேசத்தாருமான எல்லாரையும், அவர்கள் குழந்தைகளையும், ஸ்திரீகளையும் அழித்துக் கொன்று நிர்மூலமாக்கவும், அவர்களின் உடைமைகளைக் கொள்ளையிடவும், ராஜா யூதருக்குக் கட்டளையிட்டார் என்று எழுதியிருந்தது

ராஜாவின் வார்த்தையின்படியும், அவனுடைய கட்டளையின்படியும் செய்யப்படுகிறதற்கு ஆதார் மாதம்என்கிற பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாந் திகதியிலே யூதர், அகாஸ்வேரு ராஜாவின சகல நாடுகளிலுமுள்ள பட்டணங்களிலே தங்கியிருக்கும் பொல்லாப்பு வரப்பண்ணப் பார்த்தவர்கள்மேல் கைபோடக்கூடிக்கொண்டார்கள்; ஒருவரும் அவர்களுக்கு முன்பாக நிற்கக்கூடாதிருந்தது; அவர்களைப் பற்றிச் சகல ஜனங்களுக்கும் பலமுண்டாயிற்று.

நாடுகளின் சகல அதிகாரிகளும் தேசாதிபதிகளும் துரைகளும் ராஜாவின் காரியங்களை நடப்பிக்கிறவர்களும், யூதருக்கு துணைநின்றார்கள்; மொர்தெகாயினால் உண்டான பயங்கரம் அவர்களைப் பிடித்தது.

மொர்தெகாய் ராஜாவின் அரண்மனையில் பெரியவனாயிருந்தான்; அவனுடைய கீர்த்தி எல்லா நாடுகளிலும் பிரசித்தமாயிற்று; இந்த மொர்தெகாய் என்பவன் மேன்மேலும் பெரியவனான்.

அப்படியே யூதர் தங்கள் சத்துருக்களையெல்லாம் பட்டயத்தால் வெட்டிக் கொன்று நிர்மூலமாக்கி, தங்கள் இஷ்டப்படி தங்கள் பகைஞருக்குச் செய்தார்கள்.

[எஸ்தரின் சரித்திரம்; அதிகாரங்கள்: 8-9
பழைய ஏற்பாடு
பைபிள்]

இதுபோலவே சிறீலங்காவிலும் 'மொர்தெகாய்' என்ற சிறில் மத்தியூவினால் திட்டமிடப்பட்டு 'அகாஸ்வேரு ராஜா' என்ற ஜே. ஆர். ஜெயவர்த்தனாவினால் அங்கீகரிக்கப்பட்டு 'குறித்த நாளான' 1983 ஆடி 25 இல் தமிழ் மக்களின் மேல் பயங்கரம் கட்டவிழ்க்கப்பட்டது. தொடர்ந்த நாட்களிலும் பரவிச் சென்றது. கொடூரமும் அவலமும் நிறைந்த அந்த நாட்களில் கொல்லப்பட்ட அனைத்துத் தமிழ் மக்களையும் நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்துவோம்! இழிந்த அடிமை வாழ்வை ஒழிக்கச், சகல வழிகளிலும் தொடர்ந்து உழைப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவகாலனித்துவம்

இக்கட்டுரைத் தொடர் ஆங்கிலத்தில் தயன் ஜயதிலக எழுதிய Neo-colonialism என்னும் கட்டுரையின் தழுவல் ஆகும். நேரடி மொழிபெயர்ப்பினால் ஏற்படக்கூடிய தெளிவின்மையைத் தவிர்ப்பதற்காகவே தழுவி எழுதப்பட்டுள்ளது. தை 1984 முதல் 'லங்கா கார்டியன்' இதழ்களில் இக்கட்டுரைத் தொடர் வெளிவந்தது.

காலனித்துவத்தின் மறைமுகமான புதிய வடிவம்தான் நவகாலனித்துவம் (Neo Colonialism) எனச் சிலர் கருதுவதுண்டு. ஏகாதிபத்தியத்தின் தந்திரச் செயல் முறையாகவும் இதை வர்ணிப்பதும் உண்டு. இது நவகாலனித்துவம் பற்றிய தவறான கணிப்பீடாகும். சோவியத், சீன சார்பாளர்களும் ரொட்கிசவாதிகளும் நவகாலனித்துவம் பற்றிய இவ்விதமான தவறான கணிப்பீடுகளைச் செய்துள்ளனர்.

ஏகபோக முதலாளித்துவத்தின் புதிய கட்டம் ஒன்றையே நவ காலனித்துவம் குறிக்கின்றது. இது கீழ்க்கண்ட இரு முக்கிய நிலைமைகளின் கீழ் உருவானது.

அ) உலக முதலாளித்துவ அமைப்பின் அடிப்படையான சர்வதேச வேலைப் பிரிவினையில் முக்கிய மாறுதல் ஒன்று உருவாகியமை.

ஆ) இம்மாறுதலின் விளைவாக சர்வதேச மட்டத்தில் புதிய வர்க்க அமைப்புகள் உருவாகின.

1945 ஆம் ஆண்டின் பின்னரே இத்தகைய புதிய நிலைமைகளும் அதன் பயனாக நவகாலனித்துவமும் உருவானது. எனினும் 1945க்கு முன்னரே சில காலனி நாடுகளில் அமெரிக்காவும், பிரிட்டனும் நவகாலனித்துவ முறையின் ஆரம்ப வடிவங்களைப் பயன்படுத்தின. இம் முறை பிரதானமாக லத்தின் அமெரிக்காவிலும், அரைகுறை உருவில் மத்திய கிழக்கு, ஆபிரிக்கா, ஆசியா ஆகியவற்றிலும் பயன்படுத்தப்பட்டன. நவகாலனித்துவம் அதன் ஆரம்ப கட்டத் தோற்ற நிலையில் இருந்த பொழுதே, அதன் முக்கிய இயல்புகளை இனங்கண்ட தீர்க்கதரிசி லெனின் ஆவர். காலனித்துவத்தின் (Colonialism) வேறுபட்டதான மூன்று பிரதான இயல்புகளை லெனின் இனங்கண்டு காட்டினார். இந்த புதியவகை அடிமைத் தனத்தின் மூன்று அம்சங்களாவன.

(1) அரசியல் விடுதலை ஏகாதிபத்திய நாட்டின் நேரடி ஆளுகைக்குப் பதிலாக தேசிய முதலாளிகள் ஆட்சியைப் பொறுப்பேற்கின்றனர்.

(2) பொருளியல் அடிமைத்தனம் தொடருகிறது. குறிப்பாக நிதி, வர்த்தகம் ஆகியவற்றில் தங்கியிருத்தல் நிலை ஏற்படும்.

(3) ஏகாதிபத்திய அரசுகளுக்கும், தங்கியிருக்கும் நாட்டின் சலுகைபெற்ற வர்க்கங்களுக்குமிடையே பரஸ்பர உடன்பாடு ஏற்படல்.

கொமின்ரேர்ணின் இரண்டாவது மாநாட்டிற்கு 1920 யூலை 19 ஆம் திகதியன்று சமர்ப்பித்த அறிக்கையில்லெனின் பின்வருமாறு குறிப்பிட்டார்.

''நேரடியான அரசியல், சட்டரீதியான அடிமைத்தனத்தை விட நிதி, பொருளியல்ரீதியான தங்கியிருத்தல் உட்பட பல்வகையான அடிமைத்தனத்தை காலனித்துவம் கருதுகிறது.

இக் கூற்றில் இருந்து அரசியல் சட்ட அடிமைத்தனம்தான் காலனித்துவத்தின் பிரதான இயல்பானபோதும் நேரடியான அரசியல் சட்ட ஆதிக்கம் இன்றியே காலனித்துவம் சாத்தியமானது என்பதை லெனின் உணர்ந்திருந்தார். இதே அறிக்கையில் வேறோரிடத்தில்;

'...திட்டமிடப்பட்ட ஏமாற்றுமூலம் ஒடுக்கப்பட்ட தேசங்களின் சலுகைபெற்ற வகுப்புகள் ஏகாதிபத்தியத்துடன் ஒன்றிணைந்து, சுதந்திர அரசுகளை நிறுவுதல் என்னும் போர்வையில் பொருளியல், நிதி விடயங்களில் முற்றிலும் அடிமைப்பட்ட அரசுகளை உருவாக்குகின்றன.

லெனினுடைய மதிநுட்பமான கூற்றுக்கள் எவ்விதமிருப்பினும் நவகாலனித்துவம் பற்றிய ஒருசெம்மையான கோட்பாட்டை அவரால் உருவாக்க முடியவில்லை எவ்வாறு மார்க்சும் எங்கெல்லாம் ஏகாதிபத்தியம் பற்றிய கோட்பாட்டை உருவாக்கியிருக்க முடியாதோ அதே போன்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லெனின் நவகாலனித்துவத்தின் முழுமையாக பரிணமித்த காலகட்டத்தில் வாழாதபடியால் அதுபற்றிய கோட்பாடு ஒன்றை உருவாக்குதல் முடியாமற்போனது. நவகாலனித்துவம் உலக அமைப்பாக மாறியது இரண்டாம் உலகயுத்தத்தின்பின் தான். எனவே லெனினிசத்திற்கு அப்பால் செல்லும் பொழுதுதான் நாம் நவகாலனித்துவத்தின் சாராம்சத்தை அறிதல் முடியும் இதன்பொருள் லெனினிசம் காலவதியாகிவிட்டதென்பதல்ல 'லெனினிடம் திரும்பிச் செல்வோம்' என்போரின் பழமைபேணும் போக்கிலும் நாம் அவதானமாக இருத்தல் வேண்டும்.

## இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிந்திய ஏகபோக முதலாளித்துவம்

நவகாலனித்துவம் உலகமுதலாளித்துவத்தின் விருத்தியினதும் அழிவினதும் விளைவு. இக்கூற்று வெளித்தோற்றத்தில் முரண்பாடாகத் தோற்றலாம். ஏனெனில் விருத்தியும் அழிவும் ஒன்றிற்கொன்று எதிரான போக்குகள். அவ்வாறெனில் முதலாளித்துவத்தின் விருத்தியும் அழிவும் நவகாலனித்துவத்திற்கு வழிசமைத்தன என்பதன் பொருள் யாது? முதலாளித்துவம் அழிந்து கொண்டிருக்கும் அதேவேளை ஒட்டுமொத்தமாக நோக்கும்பொழுது அது துரித கதியில் வளர்ந்தும் வருகிறது இரண்டாவது உலகயுத்தத்தின் பின்னர் சோஷலிச முகாமின் எழுச்சி, தேசிய விடுதலைப் புரட்சிகள் வெடித்தமை, ஜேர்மனி, யப்பான் ஆகிய பாசிச அரசுகள் முறியடிக்கப்பட்டமை, பழைய காலனித்துவ அரசுகளின் வீழ்ச்சி ஆகியன உலக முதலாளித்துவ அமைப்பிற்குக் கிடைத்த மரண அடிகள் ஆகும். இரண்டாவது உலக யுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட இவ்விளைவுகள் உலக முதலாளித்துவ நெருக்கடியின் இரண்டாவது கட்டத்தை குறித்து நின்றன [முதலாவது நெருக்கடி முதல் உலக யுத்தத்தின் விளைவாகவும் ரஷ்யப் புரட்சியினாலும் எழுந்தது] இவை முதலாளித்துவ அழிவின் [decay] குறிகள்.

அதேவேளை உலக யுத்தத்தின் பயனாய் காலனிகளின் பொருளியல் விருத்தி முடுக்கிவிடப்பட்டது. "ஏகாதிபத்தியத்தின் பிரதான இயல்பு யாதெனில் பின்தங்கிய நாடுகளின் பொருளியல் விருத்தியை அது துரிதப்படுத்துவதுதான்" (சமாதானம் பற்றிய கேள்வி—யூலை—ஆகஸ்ட் 1915) என லெனின் கூறினார். முதலாளித்துவ வளர்ச்சியின் விளைவாக காலனித்துவம் நவீனகாலனித்துவமாக உருவெடுத்தது. இரண்டாம் உலகயுத்தத்தின் பின் ஏற்பட்ட விருத்தியினதும் அழிவினதும் (Development and decay) பயன்தான் நவகாலனித்துவம் என்பதன் பொருள்.

ஏகபோக முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் புதிய கட்டத்தையே நவகாலனித்துவம் என்கிறோம். நவகாலனித்துவத்தின் பொருளியல் இயல்புகள் யாவை? உலக முதலாளித்துவம் நவகாலனித்துவ கட்டத்தில் கீழ்கண்ட இரு இயல்புகளை கொண்டமைகிறது.

1) அரச ஏகபோக முதலாளித்துவம் (State Monopoly Capitalisam)

2) பல்தேசிய நிறுவனங்கள் (Multi National or Trans National Corparation)

இரண்டாம் உலகயுத்தத்தின் பின் முதலாளித்துவ அமைப்பில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்களில் ஒன்று முதலாளித்துவ அரசு பொருளியல் நடவடிக்கைகளில் பெரிய பங்கை வகிப்பதாகும். இது குணும்ச ரீதியான மாறுதலைக் கொண்டுள்ளது. முழுப் பொருளாதாரத்தினதும் கட்டுப்பாட்டில் அரசு கூடிய பங்கை பெற்றுள்ளது. தேசியமயமாக்கப்பட்ட தொழில்கள்,

---

## தோட்டத்தொழி...

[13 ம் பக்கத் தொடர்ச்சி]

இங்கு திருமணமாகாத இரு வாலிபர்கள் தோட்ட டாக்டர்களின் தூண்டுதலால் கருத்தடை அறுவை சிகிச்சைக்குள்ளான அதிர்ச்சியூட்டும் சம்பவம் நடைபெற்றுள்ளது.

பொருளியல் நோக்கு (மார்ச் 1980, பக்-19) இதனை நிரூபிக்கும் மற்றொரு புள்ளிவிபரத்தை வெளியிட்டது. 1974ல் எல்லா இனத்தவர்களிடையேயும் ஜனத்தொகை வளர்ச்சி 1973ல் 1000க்கு 20.3 என்பதில் இருந்து 1974ல் 18.5 ஆகக் குறைந்தது. இந்தியத்தமிழர்களது ஜனத்தொகை வளர்ச்சி வீதம் 1973ல் 14ல் இருந்து 1974ல் 7.1 (சரிபாதி) ஆகக் குறைந்தது என்று குறிப்பிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத் திணைக்களங்கள், சபைகள், கூட்டுத் தாபனங்கள் என்ற வடிவங்களில் அரசு தனியார் துறை உற்பத்தியில் கூடியளவு தலையிடுகிறது. இதனால் நவகாலனித்துவக் கட்டத்தில் அரச ஏகபோக முதலாளித்துவத்தின் (State Monopoly capitalism) தோற்றம் ஒரு முக்கியமான இயல்பாகும். அரச ஏகாபோக முதலாளித்துவம் மலர்ந்த அதேவேளை நவகாலனித்துவத்தின் கீழ் பல்தேசிய நிறுனங்கள் பல்கிப் பெருகியதுடன் மேலாதிக்கமும் பெற்றன.

தனி நாடுகளை மையமாகக் கொண்டு இயங்கிய ஏகபோக முதலாளித்துவ நிறுவனங்கள் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் பலநாடுகளையும் தழுவிய பல்தேசிய நிறுவனங்களாக மாறின. இவை உலகரீதியில் ஊடுருவனவாயும், இணைப்பையும் பலத்தையும் கொண்டிருந்தன. இத்தகைய பல்தேசிய நிறுவனங்கள் 1. நேரடியாகப் பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் 2. நிதிமூலதனத்தை அளிக்கும் ஏகபோக நிதி நிறுவனங்கள் என்னும் இருவகையின. பழைய காலனித்துவத்தை நவகாலனித்துவமாக மாற்றும் இந்தச் செயல்முறை இரண்டாம் உலக யுத்தத்தின் பின் ஏற்பட்ட மிக முக்கிய மாற்றமாகும். இம் மாற்றத்திற்கான அவசியத்தையும் தேவையான நிலைமைகளையும் பின்வரும் இரு வளர்ச்சிகள் ஏற்படுத்தின.

அ) பல்தேசிய நிறுவனங்களின் எழுச்சி.

ஆ) காலனித்துவ நாடுகளில் முதலாளித்துவ வளர்ச்சி.

ஏகாதிபத்தியம் நவகாலனித்துவப் பாதையில் செல்வதை ஸ்டாலின் முன்கூட்டியே அடையாளம் கண்டார். காலனித்துவ நாடுகளின் சுரண்டலையும், ஏகாதிபத்தியங்கள் தத்தம் சமூகத்தை இராணுவமயப்படுத்தலையும் [Militari Sation] முக்கிய அம்சங்களாக ஸ்டாலின் சுட்டிக்காட்டினார்.

நவகாலனித்துவத்தின் எழுச்சி உலகமட்டத்திலும், மூன்றாவது உலகின் காலனி நாடுகளின் மட்டத்திலும் ஏற்பட்ட முக்கிய மாற்றங்களின் சேர்க்கையான விளைவு ஆகும். பழைய காலனித்துவம் உலக முதலாளித்துவத்தின் உற்பத்திகளின் விற்பனைச் சந்தையாகவும், மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்யும் முதல் விளைவுப் பொருட்களின் உற்பத்தி இடமாகவும் விளங்கியது. பழைய காலனித்துவம் முதலாளித்துவ வளர்ச்சியை மட்டுப்படுத்திய அதேவேளை நிலச்சுவாந்தர், ஏனைய உள்ளூர் வர்த்தகர் ஆகிய வகுப்புகளின் ஆதிக்கத்தை தகர்க்கவில்லை. இதனால் நிலமானிய உறவுகள் பேணப்பட்டன. நிலப்பிரபுக்களும் வர்த்தகர்களும், முதலாளிகளும் ஏகாதிபத்தியத்தின் தரகர்களாகச் செயல்பட்டனர்.

பழைய காலனித்துவத்தின் கீழ் உருப்பெற்று வளர்ந்துவந்த வர்த்தக முதலாளித்துவம் பண்டங்களை உற்பத்திசெய்யும் தொழில் முதலாளித்துவமாக மாறும் ஆசையைக் கொண்டிருந்தது. இந்த ஆசை நிறைவேற வேண்டுமாயின் காலனி நாட்டில் அடிப்படையான சில மாறுதல்கள் வேண்டும். இந்நாடுகள் தேசிய அரசுகளாக (National States) வளரவேண்டும். பல்கலைக் கழகங்கள், நகரங்கள், அரச நிறுவனங்கள் ஆகிய அடிப்படை வசதிகள் பெருக்கப்பட வேண்டும், கிராமப்புறங்களில் கட்டுப்பட்டிருந்த விவசாய வர்க்கம் விடுவிக்கப்பட்டு புதிய தொழில் முயற்சிகளை நாடி மக்கள் நகரத்திற்கு இடம் பெயரல் வேண்டும். சுருங்கக் கூறின் நிலமானிய, குலமரபுச் சமூக அமைப்பு தகர்க்கப்பட வேண்டும். நாட்டிற்கும் மக்களிற்கும் 'சுதந்திரம்' வேண்டும்.

காலனி நாட்டின் உள்ளே இவ்வித சக்திகள் செயற்பட்ட அதே சமயம் உலக அரங்கிலும் ஏகாதிபத்திய அரசுகளோ முன்வந்து காலனி நாடுகளுக்கு 'சுதந்திரம்' வேண்டும் என்று கூறின. இரண்டாம் உலக யுத்தத்தின் பின் ஏற்பட்ட விடுதலை இயக்கங்களை ஏகாதிபத்திய அமெரிக்காவே ஆதரித்தது. காரணம் உலக ரீதியில் பல்தேசிய நிறுவனங்களின் சுரண்டல் முறைக்கு பழைய காலனித்துவ முறை தடையாக இருந்தது. ஏகாதிபத்திய நாடுகள் ஒவ்வொன்றும் காலனிகளாக கட்டியாளும் முறை புதிய உற்பத்தி நிலைமைகளுக்குப் பெரிதும் தடையாகியது. உள்ளூர் மட்டத்தில் எழுச்சி பெறும் காலனிய முதலாளிகள் நிலமானிய உறவுகளின் பிடியில் அடிமைகளாய் இருப்பதை விரும்பாது அவர்களிற்கு 'சுதந்திரம்' கேட்டது போன்று உலக மட்டத்தில் வல்லரசுகள் காலனிகளுக்கு அரசியல் சுதந்திரம் வேண்டும் எனப் பாடுபட்டன. அரசியல் விடுதலையும், பொருளியல் தங்கியிருத்தலுமே (Dependency) புதிய 'சுதந்திரத்தின்' சாராம்சம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக மட்டத்தில் பல்தேசிய நிறுனங்கள் வளர்ச்சி பெற்றதை ஏற்கனவே குறிப்பிட்டோம். உலக மட்டத்திலுலான இவ்வளர்ச்சியுடன் காலனிகளின் மட்டத்தில் இன்னோர் வளர்ச்சி சமாந்தரமாக ஏற்படுகிறது. அதுதான் காலனிய முதலாளித்துவத்தின் எழுச்சி, இந்த இரு போக்குகளுமே நவகாலனித்துவத்தின் தோற்றத்திற்கு ஏதுவான காரணிகளாகும்.

நவகாலனித்துவத்தின் கீழ்முதலாளிகளும், அரச நிர்வாகிகள், ராணுவ அதிகாரிகள், குட்டி முதலாளித்துவ அறிவாளி வகுப்பினர் ஆகியோர் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றுகின்றனர். இவர்கள் ஏகாகதிபத்தியங்களின் கூட்டாளிகளாகவும் மாறுகின்றனர். இந்த வகுப்பினர் பழைய நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ, கொம்பரேடார் வகுப்பினரை அகற்றுதல் மூலமும் அந்த வகுப்பினரைத் தம் முள் சேர்ப்பதன் மூலமும் ஆட்சிபீடம் ஏறுவர். எனவே நவகாலனித்துவம் வர்க்க ரீதியில் அடிப்படை மாற்றம் எதனையும் கொண்டு வராது. வர்க்க உறவுகளை தேசிய முதலாளித்துவத்தின் தலைமையில் மறுசீரமைப்பது மட்டும்தான் நிகழும்.

நவகாலனித்துவம் ஏகாதிபத்தியத்தால் காலனிகளுக்கு வழங்கப்படும் ஒரு 'சலுகை' தான்! அது மட்டுமல்ல உலகரீதியான புதிய வேலைப்பகுதியில் காலனிகளின் முதலாளிகள் புதிய கடமைகளை ஏற்கிருர்கள். தேசிய முதலாளித்துவம் நாட்டின் பொருளியல் அமைப்பிலும் போக்கிலும் ஏற்படுத்தும் மாற்றங்கள் இருவடிவங்களில் முனைப்புப் பெறும்.

அ) நவகாலனியின் பொருளியலின் அரசின் தலையீடு (International role of the Capitalist State)

ஆ) கைத்தொழில் வளர்ச்சி சுயத்துவம் அற்ற தங்கியிருத்தல் அடிப்படையில் நவகாலனிகளில் வளர்ச்சியுறல் (Dependent Iudustrialisation)

ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சியின் போது ஜேர்மனி, யப்பான் போன்ற நாடுகளில் முதலாளித்துவ உற்பத்தியிலும் ஏனைய பொருளியல் நடவடிக்கைகளிலும் அரசு பெரும் பங்கை வகித்தது. இதேபோன்ற நிலை நவகாலனித்துவ நாடுகளிலும் காணப்படுகிறது. இந்நாடுகளின் தேசிய அரசுகள் பொருளியல் நடவடிக்கைகளில பங்குபெறுவதன் ஒருகாரணம் இந்நாடுகளின் முதலாளிவர்க்கம் போதிய பலமற்று இருப்பதாகும் இக்காரணத்தால் அரசு முதலாளித்துவம் (State Capitaisan) முதலாளிவர்க்கப்பிற்குத் துணையாகவும் பக்கபலமாகவும் செயற்படுகிறது.

[தொடரும்]

# தென்னாசியப்...

(17ம் பக்கத் தொடர்ச்சி)

(இடைநடுவில் கைவிட்டு விடுமோ?) ''எமது தளைகளை நாமே அறுப்போம், உடைப்போம் எமது விலங்குகளை நாமே உடைப்போம்' என்ற கோசத்தின் பின்னணியில் ஒரு அதீத தன்னம்பிக்கையும் இங்கு வெளியிடப்படுவதனை எவரும் உணரக்கூடும். இந்துமாகடல் பகுதியில் சக்தி மிக்க ஜனநாயக நாடுகளில் ஒன்ருக இந்தியா இருக்கும் வரையிலும், புவியியல் ரீதியாக இந்திய—இலங்கைத் தொடர்பினுலும், இந்தியா உலக விவகாரங்களில் முற்போக்கு முகாமை ஆதரித்து நிற்பதனுலும், இது போன்ற இன்ன பிறகாரணங்களினுலும் ஈழப் போராட்டத்தின் வெற்றியில் இந்தியாவின் பங்களிப்பு மிகமுக்கியமானது. அதேவேளை இங்கு நிலவும் இந்திய எதிர்ப்புங்கூட உள்ளடக்கத்தில் சோசலிச எதிர்ப்பின் விளைபொருளே. எனவே இத்தன்மைகளைக் கொண்டிருக்கும் சக்திகள் ஈழப் போராட்டத்தை முன்னெடுப்பது அசாத்தியமானதே.

ஆகவே, ஈழப் போராட்டத்தின் அகப்புறச் சூழ்நிலைகளைக் கவனத்தில் எடுத்து, அயல்நாடுகளின் உதவிகளையும், ஒத்தாசைகளையும் வகையாகப் பயன்படுத்தி, எமது மக்களின் போராட்டத்தை ஒழுங்கான முறையில் நெறிப்படுத்துவோமாயின் எமது வெற்றி நிச்சயம். எமது வெற்றியின் மூலம் சிறீலங்காவின் மக்களுக்கு மட்டுமல்ல, தென்னாசியநாட்டு மக்களனைவரும் சோசலிசப் பாதையில் வீறுநடைபோடும் ஒரு நிலைமையையும் தோற்றுவிக்கமுடியும். சுருங்கச் சொன்னல் தென்னாசியப் பிராந்தியத்தில் ஈழப் போராட்டம் சோசலிசப் பாதையின் திறவுகோல் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்சல்வடோர்-
# தொடரும் போராட்டம்

தொடர்: இரண்டு

ஜோய்

## இறுதி மீட்பு நோக்கிய சிந்தனைப் போக்குகள்

கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்ட 1970 இல் ஏற்பட்ட அரசியல் நிலைமைகளால் கட்சியின் சட்டபூர்வமான அமைப்பாகவிருந்த தேசிய ஜனநாயக சங்கத்திலிருந்து பிரிந்த ஆயுதக்குழு (FPL-FM) பின்னர் பரமண்டே மார்ட்டி தேசிய விடுதலைப் படை (FMLN) என ஆகி இன்று வலதுசாரி அமெரிக்க சார்பு அரசாங்கத்திற்கெதிராகப் போராடி வருகின்றது. கெரில்லாக் குழுக்களின் குருவாக இருந்து வரும் சேகுவேராவின் “மலைகள் கெரில்லாக்களுக்குச் சிறந்த பிரதேசங்கள்” என்ற கூற்றுப்படி அல்லாமல் எல்சல்வடோரில் மலைகள் குறைவாதலால் அங்கிருந்து அரசியல் இராணுவ இயக்கங்கள் யாவும் மக்களே எமக்கு மலைகளுக்குச் சமமானவர்கள் என்கின்றன. FMLN தலைவர்களில் ஒருவரான ‘சுயாடெனோ’ என்பவர் ஆரம்பகாலம் தொட்டே கெரில்லா ஃபோக்கோ (Foco) கொள்கையை நாம் பின்பற்றுகின்றோம்; லத்தின் அமெரிக்காவின் சில கெரில்லாப் படைகளின் அனுபவத்தை மற்றும் வெளிநாடுகளில் மக்களிடம் இருந்து விலக்கப்பட்ட கெரில்லா குழுக்களின் அனுபவத்தையும் நாம் பின்பற்றுகின்றோம் என்கிறார் மற்றைய அரசியல் இராணுவக் குழுக்கள் இப் ஃபோக்கோயிசத்தை எதிர்த்தன. மேலும் FMLN முற்று முடிதாக கெரில்லாப் போராட்டத்திலேயே நம்பிக்கை வைத்து தொழிலாளர் வர்க்கக் கிளர்ச்சிகளால் புரட்சி செய்வதில் நம்பிக்கை இழந்ததாகக் காணப்படுகின்றது. இடதுசாரிகள் சிலரினால் (ஸ்பாட்டசிஸ்ட்) குறை கூறப்படுகிறது. உதாரணமாக FMLN தலைவர்களின் ஒருவரான “கார்ப்பியோ” ஒரு கட்டுரையில் “நாம் அமைக்கப் போவது புரட்சிகர ஜனநாயக அரசாங்கமே ஒழிய சோஷலிச அரசாங்கம் அல்ல” எனக்குறிப்பிடுவது சுட்டிக் காட்டப்படுகின்றது. ஆயினும் கியூபப் புரட்சியின் போது கஸ்ரோவின் ‘கிரான்மா’ கெரில்லாப் படையும் குட்டிப் பூர்சுவா வர்க்கப் பிரதிநிதிகள் அடங்கிய வீர சாகசச் செயல்களைச் செய்ய விரும்புகின்ற குழு என்றே அடையாளங் காணப்பட்டிருக்கின்றது. ஆனால் அது இன்று சோஷலிச சக்திகளின் நண்பனாகவும் புரட்சிகர இயக்கங்களின் துணைவனாகவும் இருந்து வருகின்றது மேலும் FMLN அணியானது சீனாவின் மாதிரியிலான “நீண்டகால மக்கள் யுத்தத்தை கைக்கொண்டுள்ளது. இடையறாத கெரில்லாத் தாக்குதல்கள் மூலம் எதிரியைப் பலமிழக்கச்செய்தலும் அதேவேளை படிப்படியாக மக்களைப் புரட்சிக்குத் தயார்பண்ணலுமே நீண்டகால மக்கள் யுத்தம் எனப்படுகின்றது. FMLN/FDR கூட்டின் Popular Frountist and Gurllaist கொள்கைகள் தொழிலாள சக்தியை நிராகரித்து இராணுவ ரீதியான வெற்றியைக் கருத்திற் கொண்டு செயலாற்றி வருவதே 1983 இல் போராட்டம் பின்னடைந்தமைக்கான காரணம் என சில இடதுசாரிகள் பின் அக் கூட்டினைக் குற்றம் சாட்டுவது தொடர்கிறது.

FMLN உடன் இணைந்து கூட்டு நடவடிக்கைகளில் இயங்கிவரும் மக்கள் அமைப்பான புரட்சிகர மக்கள் அமைப்பு (Revolutionary Popular Block) (BPR) உண்மையான பாட்டாளி வர்க்கத்தைத்தான் பிரதிநிதித்துவப்படுத்துவதாக கூறிக்கொள்கிறது போராட்ட நோக்கம் கொண்ட விவசாயிகளின் கிறிஸ்டியன் பெடரேஷன், கிராமப்புற தொழிலாளர் சங்கம், சல்வடோரிய ஆசிரியர் சங்கம், மாணவர்களின் விடுதலை இயக்கம் என்பன தம் போராட்ட பாதையில் நேராகச் செல்ல வேண்டும் என்பதனால் அவற்றை வழி நடத்த எழுந்த அமைப்பே புரட்சிகர மக்கள் அமைப்பாகும். இதனால் இவ் அமைப்பானது சுரண்டும் வர்க்கத்திற்கெதிராக எவ்வகையான போராட்டத்தையும் முன்னெடுக்கும் சக்தியினைக் கொண்டதாயிருந்தது இவ்வியக்கத்தின் பிரகடனமொன்று அதன் கொள்கையினைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

‘ ஏகாதிபத்திய ஆதிக்கத்தை அழித்து முதலாளித்துவ ஆட்சியை நீக்கி சோஷலிச ஆட்சியை நிறுவ தொடங்கப்பட்ட எல்லா வகையான விடுதலை முன்னெடுப்புகளிலும் பாட்டாளி வர்க்கத்தாரால் தீர்மானிக்கப்பட்ட திட்டங்கள் முக்கியத்துவம் பெறுவதை உறுதிப்படுத்த வேண்டும்...... சமுதாயத்தின் அடிப்படை மாற்றத்திற்கான செயற்பாடுகள் யாவும் பாட்டாளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கத்தின் நோடியான பங்களிப்பிலும் அதன் நடவடிக்கைகளிலுமே தங்கியுள்ளது. இப்பங்களிப்பு ஏகாபித்த தூவில் அமையவேண்டும். படிப்பறிவில்லாத நோயால் வாடுகின்ற, பட்டினியால் இறக்கின்ற அப்பாவி மக்களது உடல் உழைப்பைச் சுரண்டிக் கொண்டிருக்கின்ற ஒரு சிறு கும்பலான அந்நிய முதலாளித்துவத்தையும் தேசிய முதலாளித்துவத்தையும் விரட்டியடிப்பதையே நோக்கமாகக் கொண்டு எமது மக்கள் செயலாற்ற வேண்டும். அந்நிய தேசிய முதலாளிகளை விரட்டுவது மட்டுமல்லாமல் அதற்குப் பதிலாக உழைக்கும் மக்களின் அடிப்படை தேவைகளை நிவர்த்தி செய்யவேண்டுமென்ற ஏகோபித்த குரல்தான் இப்போது இங்கு தேவைப்படுகின்றது.

எமது நாட்டின் விடுதலை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பவர்கள் கிராமப்புற மக்களும், பாட்டாளி வர்க்கத்தினரும், விவசாயிகளும், சிறு முதலாளிகளால் சுரண்டப்படும் தொழில்களில் ஈடுபடும் தொழிலாளரும் மற்றும் மத்தியதர வர்க்க புத்திஜீவிகளான ஆசிரியர்கள், மாணவர்களுமாவர் இவர்களைத் தவிர வேறு யாரும் இந்த உரிமையைப் பெறமுடியாது. இவ் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பவர்கள் பாட்டாளி வர்க்கமாகவே இருக்கவேண்டும். மாவோ இதனைப்பற்றிக் குறிப்பிடுவது போல புரட்சிக்கான தலைமை பாட்டாளி வர்க்கத்தினரிடமே இருக்க வேண்டும். அத்துடன் அவர்களது கல்வி, ஆற்றல் என்பன விடுதலையை நோக்கியே பேணப்பட்டிருக்க வேண்டும்... தனியே பிரச்சாரத்தின் மூலம் தான் பொது மக்களின் விடுதலை பற்றிய அறிவை வளர்க்கலாம் என்ற தவறான கருத்தை BPR நன்றாக அறிந்துள்ளது. எனவே தான் அதிகாரத்தைக் கைபபற்றுவதற்கு அவர்களை முழுமையாக அடக்கிய போராட்டம் ஒன்றே சிறந்த ஆயுதம் என BPR முழு நம்பிக்கை கொண்டுள்ளது...... எமது நாட்டில் முதலாளிக்கே நிரந்தரமாக உள்ள சில உரிமைகளை எல்லோரும் சமமாகப் பெற சித்தாந்தத் தெளிவுள்ள அறிவுடைய பொதுமக்களின் சக்தியே போராட வேண்டும். எமது வேலைத்திட்டமானது புத்திஜீவிகளின் மத்தியில் மட்டும் ஆராயப்பட்டு செயற்படுத்தப்பட்ட திட்டமல்ல; முழு சமுதாயத்தினது பிரச்சினைகளையும் உள்ளடக்கக்கூடிய வகையில் அவற்றின் நேரடியான தரிசனங்களைக் கண்டு அமைக்கப்பட்ட திட்டமாகும்.

.........சோஷலிசப் பாதையில் செல்லும் மக்கள் விடுதலைக்கான இயக்கமானது பின்வருவனவற்றை அவசியம் கைகொள்ள வேண்டும். எனப் பிரகடனம் செய்யபடுகிறது.

(அ) இந்த இயக்கம் தொழிலாளர் வர்க்கத்திற்கும் இந்த விடுதலைக் கொள்கைக்காகவும் இயங்குதல் வேண்டும் இதுவே சோஷலிச விடுதலைக்கான முக்கிய நிபந்தனையாகும்.

(ஆ) இவ்வியக்கமானது பாட்டாளி விவசாயிகளுடன் மட்டும் தங்கியிராது பாதிக்கப்பட்ட ஏனைய வாக்கங்களையும் தன்னை நோக்கிக் கவரவேண்டும்.

(இ) இவ்விடயமானது மக்கள் விடுதலைப் பாதையில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையை உறுதியாக வேண்டி நிற்றல் வேண்டும்.

(ஈ) சுரண்டலை முற்றாக எதிர்க்கும் பாட்டாளி வர்க்கத்தினதும் அதனது தோழமை அமைப்புகளினதும் அடிப்படைத் தேவைகள் கொள்கைகள் என்பனவே இங்கு முக்கியத்துவப்படுத்தல் வேண்டும்.

...... குறுகிய காலங்களில் அவசரத் திட்டங்களினால் ஏற்படக்கூடிய போராட்டமானது வெறுமனே பாசிசவாதத்திற்கு எதிரான போராட்டமாகவும், இத்தகைய போராட்டத்தினால் கிடைக்கக்கூடிய விளைவு முதலாளித்துவம் சார்ந்த ஜனநாயகமாகவே இருக்கும் இதனால் நாயகம் என்ற பெயரில் மக்கள் இன்னும் இன்னும் அதிகமாகச் சுரண்டப்பட வாய்ப்பு ஏற்படும். இதனாலேயே BPR நீண்டகாலத் திட்டத்தை முன்வைக்கிறது..... இவ்வாறு அப்பிரகடணம் கூறுகிறது.

## FMLN இன் அண்மைக்கால இராணுவநடவடிக்கைகள்

*(1) 1984* புதுவருடத்திற்கு இன்னும் *20* மணித்தியாலங்கள் இருந்தபோது தலைநகரான எல்சல்வடோருக்கு, *48*km தொலைவிலுள்ள பறயிசோ கோட்டையானது தாக்கப்பட்டது. *1981* இல் அமெரிக்கப் பொறியியலாளரால் அமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட இக் கோட்டைத் தாக்கப்பட முடியாத ஒன்றாகும் என உத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்தது. அங்கு நிலை கொண்டிருந்த *2000* துருப்பினரை *800* கெரில்லா வீரர்கள் தாக்கினர். இரு மணித்தியாளங்களுள் பாதுகாப்புப் படையினரின் அரண் கைவிடப்பட்டது. அமெரிக்கரால் பயிற்றுவிக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

400 மிகச் சிறந்த வீரர்கள் ஹெலிக்கொப்டர்கள் மூலம் தருவிக்கப்பட்டனர். இது நடந்து 14 மணித்தியாளங்களின் பின்னர் கெரில்லாக் பின்வாங்கிச் சென்றனர். UPI செய்தி ஸ்தாபனம் இதுபற்றி அறிவிக்கையில் சல்வடோர் இராணுவம் 4 வருடங்களாகப் பெரும் துன்பங்களை அனுபவித்து வருவதாக அறிவித்தது. இத் தாக்குதலில் 300 அரச துருப்புகள் இறந்தனர். 200 பேர் சிறைப்பிடிக்கப்பட்டனர். இவர்களைப் பின்னர் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கெரில்லாக்கள் ஒப்படைத்தமை சர்வதேச ஆதரவையும் சல்வடோரிய இராணுவத்தினரது கவனத்தையும் ஈர்த்தது (New Times - 1984 - 10)

(2) 1983ல் 20க்கும் மேற்பட்ட நகரங்களில் உள்ள மின் உற்பத்தி நிலையங்கள் மீதும் சான்சல்வடோரில் சட்டமன்றக் கட்டிடத்தின்மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அரசாங்கத்திற்கு 20மில்டொலருக்கு அதிகமான சேதம்ஏற்பட்டது

(3) 'No to electoral force. yes to Peoples war'' என்ற அடிப்படையில் FMLN மே மாதத்தில் பல தாக்குதல்களை மேற்கொண்டது. Chatatanango என்ற இடத்திலுள்ள சக்தி விநியோக மையம் இவ்வருடம் மாத்திரம் 9 தடவைகள் தாக்கப்பட்டன. மேலும் மின்உற்பத்தி நிலைகள் மீது மேற்கொண்ட தாக்குதல்கள் நகரை பல தடவை இருளில் மூழ்கடித்தது.

(4) Verapaz, Guadolupe என்ற நகரங்களில் இடம் பெற்ற தாக்குதல்களில் பல இராணுவத்தினர் உயிரிழந்தனர். (கிராண்மா மார்ச் 18)

(5) மே 13 இல் நடந்த தேர்தலின்போது 121 வாக்குப் பெட்டிகள் தாக்குதலின் பின் கெரில்லாக்களினால் எடுத்துச்செல்லப்பட்டன.

(6) 3 அமெரிக்க ஹெலிகொப்டர்கள் ஆகஸ்டில் வீழ்த்தப்பட்டன.

இவ்வருட முற்பகுதியில் FMLNனால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் 1983 ல் அரசானது 7169 படைவீரரை இழந்தும் 1778 பேர் சிறைபிடிக்கப்பட்டும் 4000 ஆயுதங்கள் போரின் போது கைப்பற்றப்பட்டும் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

புதுவருடத் தாக்குதலின் பின் அரச படைகளின் ஆளுமை பற்றி பலரும் சிந்திக்கத் தொடங்கினர். அரசபடையினர் மனவலிமையை இழந்தவர்களாகவுள்ளனர். நூற்றுக்குமதிகமான கனிஷ்ட இராணுவ அதிகாரிகள் சண்டையிடுவதற்கு மறுத்துவிட்டனர். கெரில்லாக்கள் சிறைக்கைதிகளை செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்தமையும் எல்சல்வடோர் பறயிசோ தாக்குதல்களில் கொல்லப்பட்ட தம் சகாக்கள் புல்டோசரினால் தோண்டப்பட்ட குழிகளுள் புதைக்கப்பட்டதும் படைவீரரை அதிகமாகச் சிந்திக்கத் தூண்டியிருப்பதாக New Times என்ற பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

சல்வடோரில் தொடரும் போராட்டமானது கடந்த 5 ஆண்டுகளில் 40,000 பேர் கொல்லப்படக் காரணமாயிற்று. ஆயினும் அமெரிக்கா சல்வடோர் அரசாங்கத்திற்கு தொடர்ந்தும் ஆயுத பண உதவிகளை வழங்கி வருகின்றது. மே 18 தேர்தலில் நெப்போலியன் டுவாடே வேற்றி பெற்றமைக்கு CIAயே காரணமாகக் கூறப்படுகிறது. 9 லட்சத்து 60,000 டொலர்களை CIA கிறிஸ்தவ ஜனநாயக கட்சிக்கு தேர்தல் நிதியாக வழங்கியது. அதேவேளை தேசிய கொன்சிஸ் கட்சி வேட்பாளர் பிரான்சிஸ் கோஜோஸ் அரேரோவைத் தேர்தலில் இருந்து வாபஸ் பெறச்செய்வதற்கு 4 இலட்சத்து 37 ஆயிரம் டொலர்களை CIA வழங்கியது இதனை ''வாஷிங்டன் போஸட்'' என்ற பத்திரிக்கை வெளிப்படுத்தியுள்ளது. மேலும் 1981–83 ஆண்டுப் பகுதியில் அமெரிக்கா ஆயிரம்கோடி டொலருக்கும் அதிகமாக ஆயுத பொருளாதார உதவியை சல்வடோருக்கு வழங்கியது.

இத்தகைய நிலைமைகளினால் எல்சல்வடோர் பிரச்சினை தீராததாக உள்ளது. ரீகன் நிர்வாகம் இராணுவத் தீர்வு ஒன்றிற்கே வழி சமைப்பதனால் மத்திய அமெரிக்கப் பிராந்தியம் அமைதியை இழந்துள்ளது. எல்வசல்வடோர் நெருக்கடியை வெளிநாட்டு உதவியுடன் தோன்றியிருக்கும் உள்நாட்டு நெருக்கடி என்றே கூறவேண்டும். இதனைத் தீர்க்க வேண்டியவர்களாக FMLN இன் பத்தாயிரம் கெரில்லாக்களும் இருக்கின்றன.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டாளி வர்க்கத்திற்கு

# பிரெஷ்டின்

# அறைகூவல்

> பெடோல்ட் பிரெஷ்ட் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசைச் சேர்ந்த பாட்டளி வர்க்க இலக்கிய மேதை. 18 8 பிப்ரவரி 10-ல் பிறந்தார். 1956. ஆகஸ்ட் 14-ம் நாள் மறைந்தார்.

பாட்டாளி வர்க்கத்தின் சரித்திரக் கடமையைப் பற்றியும், அதன் புரட்சிகர முன்னணிப் பாத்திரம் குறித்தும் எழுதிய இந்த நூற்றாண்டின் மகத்தான எழுத்தாளர்களில் ஒருவரே பெர்டோல்ட் பிரெஷ்ட். இந்தக் கூற்றுக்கான எடுத்துக்காட்டுகள் அவரது எழுத்துக்களில் ஏராளம்: ஏராளம்.

1930-ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில், அன்றைய வெய்மார் குடியரசில் (Weimar Republic) பூர்ஷ்வாக்களுக்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் இடையில் கடுமையான போராட்டம் நடந்து கொண்டிருந்தது. 'அரசு அதிகாரத்தை யார் வென்றெடுப்பது?' என்னும் பிரச்சினையின் மீது முழு கவனமும் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ஜெர்மனிய பூமியில் முதன் முதலாக உதயமாகவிருந்த தொழிலாளி விவசாயி அரசாகிய ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் கரு்யூன் காலம் அது.

அத்தகைய காலத்தில்தான் 'தாய்' (Mother), 'மெஷர்ஸ் டேக்கன்' (Measures Taken) என்னும் நாடகங்களை அவர் எழுதினார்.

பிரெஷ்டின் நீ நாடகமான 'தாய்' அதே பெயரில் மாக்சிம் கார்க்கி எழுதிய, அதே பெயருள்ள புகழ்பெற்ற நாவலின் தழுவலே. நவம்பர் யுகப்புரட்சிக்குப் பிந்தைய காலத்தில் (1918) ஜெர்மனியில் நிலவிய நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, மகத்தான யுகப்புரட்சி நிகழவிருந்த காலம் வரை கதையைக் கொண்டு செல்கிறார். பயங்கரமாகப் படுகொலை செய்யப்பட்டவரும் நினைவில் நீங்காத இடம் பெற்றவருமான ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் சகநிறுவனர் ரோசாலக்சம்பர்க்கை கௌரவிக்கும் விதத்தில் 1932ம் ஆண்டு ஜனவரி மாதம்தான் இந்த நாடகத்தை பிரெஷ்ட் அரங்கேற்றினார்.

அடிப்படை லட்சியங்களை மறந்து விட்டு, சிறிய கூலி உயர்வை நாடி ஓடும் சீர்திருத்தவாத தொழிற்சங்கத் தலைவர்களை, 'தி சாங் ஆஃப் த பாட்ச் அன் த கோட்' (The song of the patch and the coat) என்னும் பாடலில் சாடுகிறார் பிரெஷ்ட். அப்பாடலில்,

எமது ஆடை
கிழிந்து நைந்திடும்
ஒவ்வொரு சமயத்திலும்
ஓடிவந்து நீ சொல்வதென்ன?
'இனி இது உதவாது' என்பதுதானே!
இதோ இந்தக் கணமே
அதை சரி செய்யவேண்டும்
நமது சக்தி முழுவதையும்
நாம் பிரயோகிப்போம்.
நேர்ந்தது என்னவென்று
நெடு நேரமாய்
கடும்பனியில் காத்திருந்தோம்!
எஜமானரிடம் ஆவேசமாய் ஓடி
எமக்கு நீ என்ன கொணர்ந்தாய்?
இதோ
இந்த ஒட்டுத்துணிதான்
எமக்காக நீ வென்றுவந்த
சாதனையோ?
நல்லது
ஒட்டுத்துணி இருக்கட்டும்;
ஆனால், மீதம்–
அணியும் அங்கி எங்கே?

என்று புரட்சிகரத் தொழிலாளர்கள் சினந்து பாடுகிறார்கள். மேலும்,

எமக்குத் தேவை
துக்கடாக்கள் அல்ல-
நல்லாடைகளே
எமக்குத் தேவை
எலும்புத் துண்டுகள் அல்ல-
நல் லுணவே
எமக்குத் தேவை
எளியதோர் வேலை மட்டுமல்ல–
ஆலைகள் அனைத்தும்
நிலக்கரி வயல்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாதுவளங்களும்-
அதுமட்டுமா,
அரசின் அதிகாரம்
அதுவே எமக்கு வேண்டும்
என்றல்லவா கேட்கிறோம்!
என்று அவர்கள் பாடி முடிக்கிறார்கள்.

'கம்யூனிசம் என்பது ஒரு குற்றமாமோ?' என்று ஒரு சாதாரணப் பெண் தொழிலாள கதைத்தலைவி வ்லாசோவாவிடம் வினவுகிறாள். வ்லாசோவா, ஒரு விதவை-தொழிலாளி ஒருவனின் தாய். அவள்,

கம்யூனிஸம் என்றால் என்ன என்பதைப் பின்வருமாறு பாடி விளக்குகிறாள்:

"அது-
அர்த்தமுள்ளது
அனைவராலும்
புரிந்துகொள்ளத் தக்கது.
அது-
எளியது.
சுரண்டலாளன் அல்லள்
நீயெனில்
புரிந்துகொள்ள முடியும்
உன்னால்.
அது-
உனக்கு நலந்தருவது
உனது தேடலில்
அதனை அறிந்துகொள்வாய்.
முட்டாள் அதனை
முட்டாள் தனமானதென்பான்
அழுகல்பேர்வழி அதனை
அழுகல் என்பான்
ஆனால்-
முட்டாள்தனத்திற்கும் அழுகலுக்கும்
முதல் எதிரி அது.
சுரண்டலாளன் அதனை
குற்றமென்பான்.
ஆனால்-
குற்றங்களுக்கு
முடிவுகட்டுவதே அது.
அது சித்தப்பிரமையல்ல-
சித்தப்பிரமையின் முற்றுப்புள்ளி.
அது குழப்பமல்ல-
ஒழுங்கின் சின்னம்.
அது மிகவும் எளிமையானது
அதனைக் கொணர்வதோ கடினம்"

தி 'மெஷர்ஸ் டேக்கன்' (The Measures taken) என்னும் நீதி நாடகத்தில் கட்சியைப் பற்றியும் தொழிலாளி வர்க்கத்தைப் பற்றியும் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம்:

"தனிமனிதனுக்கு விழிகள் இரண்டே
கட்சிக்கோ ஆயிரமாயிரம்.
ஏழு தேசங்களைப் பார்வையால்
தழுவி அளக்கும் கட்சி
தனியனின் கண்ணில் தெரிவது
சிற்றூர் ஒன்றே!
தனிமனிதன் அழிக்கப்படலாம்
ஆனால்
கட்சியை அழிக்க யாரால் இயலும்?
ஏன்?
மக்களின் முன்னணிப்படை
அல்லவா அது!
எதார்த்தத்தை அங்கீகரிப்பதிலிருந்து
எழுகின்ற
தன் போர்ப்பதாகையைத்
தாங்கிச் செல்கிறது அது"
என்று முழங்குகிறார் பிரெஷ்ட்.
"ஆனால் கட்சி என்பது யார்?
தொலைபேசி அருகிருக்க
வீட்டோடு முடங்கியிருப்பதா?
எண்ணங்கள் வெளிப்படாமலும்
முடிவுகள் தெரிபடாமலும்
இருப்பதுவோ அது?
கட்சி என்பது யார்"

என்று வினவும் இளம் தோழருக்கு அதே நாடகத்தில் பதிலளிக்கிறார் பிரெஷ்ட்

"நாமே கட்சி.
நீயும்-நானும்
அதோ
அவனும் நாம் அனைவரும்.
அது உன்
ஊனோடும் உயிரோடும் கலந்தது.
நான் எங்கே வாழ்கிறேனோ
அதுவே அதன் இல்லம்.
நீ எங்கே தாக்கப்படுகிறாயோ
அங்கே உனக்காகப் போராடும்"

என்பதே பிரெஷ்டின் பதில்.

புரட்சியாளர்கள், கட்சியின் அங்கத்தினர்கள் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்கிற வினாவுக்கு பிரெஷ்டின் விளாசோவா பதிலளிக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அடக்குமுறை பெருகும்போது
வீழ்ந்துபடுவோர் பலராவர்
ஆனுல் அவர்தம்
வீரமோ ஓங்கி வளர்கிறது''
என்று பாடும் விளாசோவா,

''ஊதிய உயர்வுக்காக, தேனீருக்காக
அரசியல் அதிகாரத்திற்காக
அவர் போராடுகிருர்.
எங்கிருந்து வந்தாய் என
ஆஸ்தியை அவர் வினவுகிருர்.
யாருக்குப் பயனுவாய் என
கருத்துக்களை அவர் துழாவுகிருர்,
எங்கே நிசப்தம் நிலவுகிறதோ
அங்கே அவர்தம்
சிம்மக்குரல் வெடிக்கும்.
எங்கே அடக்குமுறை தாண்டவமாடுகிறதோ
எங்கே விதியின் விளையாட்டு குறித்து
பேசப்படுகிறதோ
அங்கே அவர் இட்ட பெயர் நிலைக்கும்.
எங்கே அவர் அமர்கிருரோ
அங்கே மனக்குறை இடம் பிடிக்கும்,
உணவு அழுகல் நாற்றமடிக்கும்
அறையெங்கும் சிதைந்திருக்கும்.
எங்கெல்லாம்
அவர்கள் அதை வேட்டையாடுகிருர்களோ
அங்கெல்லாம்
அமளி துமளியாகும்.
அவர்கள் அவரை வெளியேற்றுகிருர்களோ
அங்கெல்லாம்
சஞ்சலம் வழிந்து நிறையும்''
என்கிருர் விளாசோவா.

இவ்வாறு பாடும் விளாசோவா எப்படிப் பட்டவள்? அவளது சகாக்களே பின்வருமாறு வர்ணிக்கிருர்கள்.

''தலைசிறந்த போர்வீராங்கனை
கடின உழைப்பாளி
சாதுர்யமிக்கவள்—நம்பத் தகுந்தவள்
போராட்டத்தில் நம்பிக்கைக்குரியவள்.
எதிரியைப் பொறுத்தவரை
சூதுமிக்கவள்
கிளர்ச்சியின் போது
கடுமையாக உழைப்பவள்
அவளது பணி சிறிதேயாயினும்
மனேதிடத்தோடு நிறைவேற்றப்படுவது
இன்றியமையாதது
அவள் தனியள் அன்று.
எங்கெல்லாம்
அவள் போராடுகிருளோ
அங்கெல்லாம் அவளையொத்தவர்கள்
சாதுர்யமாக
நம்பத்தகுந்தவாறு
மனே திடத்துடன் போராடுகிருர்கள்.
டூவரிலும்
க்ளாஸ்கவிலும்
லியான்சிலும்
சிகாகோவிலும்
ஷாங்ஹாயிலும்
கல்கத்தாவிலும்
அவர்கள் போராடுகிருர்கள்.
அனைத்து தேசங்களிலும் உள்ள
விளாசோவாக்கள்
அந்தக் சின்னஞ் சிறியவர்கள்
புரட்சியின் பெயர் தெரியா வீரர்கள்
நடத்தும் போராட்டம்
இன்றியமையாதது'' என்பதுதான் புரட்சி யாளர்களின் தீரம்.

மீண்டும், இங்கேயும்கூட ''அரசியல் அதி காரத்துக்கான போராட்டம் குறித்து பிரெஷ்ட் அழுத்தம் கொடுக்கிருர். இதை எப்படி வென் றெடுப்பது? இதோ பிரெஷ்ட் வழி காட்டுகிருர்.

'உலகை
தலைகீழாகப் புரட்டிப்போடு
அதைச் செய்தே தீரவேண்டும்,
மரணப்படுக்கையில் கிடப்பவனுக்கு
கசக்கும் மருந்துதான் எது?
நீதியைக்காக்க
நீதிமான் யாருடன் சேரமாட்டான்?
சிறுமையை ஒழிப்பதற்கு
எந்தச் சிறுமையை
ஏற்ருல்தான் என்ன?
இறுதியில் உன்ஞல்
உலகை மாற்ற முடியுமெனில்
அதற்கான ஆளுமை
எங்கிருந்து பெற்ருய்?
யார் நீ?
நம்பிக்கை நதியில் மூழ்கு
உலகை
தலைகீழாகப் புரட்டிப்போடு
அதைச் செய்தே தீரவேண்டும்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகைமாற்றவேண்டுமானல் என்ன செய்ய யவேண்டும்? "தி" வெஷர்ஸ டேக்கன்" என் னும் நாடகத்தில் வருகின்ற கதாபாத்திரத்தின் மூலம் இதை விளக்குகிருர் பிரெஷ்ட்,

'சீற்றமும் உறுதியும்
அறிவும் ஆவேசமும்
செயல் துடிப்பும்
சிந்தனையில் தீர்க்கமும்
எல்லையில்லாப் பொறுமையும்
முடிவில்லா முயற்சியும்
செறிந்த ஞானமும்
தெளிந்த அறிவும்
வாழ்க்கையே கற்றுத்தரும்
அந்த ஞானமே
வாழ்வினை மாற்றும்-
என்பது பிரெஷ்ட்டின் விளக்கம்.

ஆம்; இந்த வாழ்க்கை கற்றுத்தரும் ஞானத் திற்குத்தான் வாழ்வை மாற்றும் ஆற்றலுண்டு. இந்தஞானம். நடைமுறையில் செயலாக்கப் படவேண்டுமானல் ஒருவன் என்னசெய்யவேண் டும்? எழுத்தறிவில்லாத தொழிலாளியை நோக்கி வளாசோவா கூறுகிருள்:

'எளியவற்றைக் கற்றுத்தெளி
அதற்கான நேரம்
முன்னமே வாய்த்து விட்டது
இன்னும் காலங்கடந்துவிடவில்லை
உனது அரிச்சுவடியைக்
கற்றுக்கொள்
ஆனல்
அதுமட்டுமே போதாது
இருந்தாலும் அதைக் கற்றுக்கொள்.
அந்த ஆரம்பம்
அதனல் அதைரியப்பட்ட வேண்டாம்!
ஒவ்வொன்றையும்
நீ அறிந்திருக்க வேண்டும்.
தலைமையை நீ ஏற்க வேண்டும்.
அடைக்கலம் புகுந்துள்ள
மனிதனே, நீ கற்றுக்கொள்!
சிறையில் அடைந்துகிடக்கும்
மனிதனே, நீ கற்றுக்கொள்!
சமையலறையில் இருக்கும்
மனைவியே, நீ கற்றுக்கொள்!
அறுபது வயதை அடைந்த
முதியவனே, நீ கற்றுக்கொள்!
வீடிழந்தவர்களே நீங்கள்
கல்விக் கூடத்தைத் தேடுங்கள்!
நடுங்கிக் கொண்டிருப்பவர்களே
உங்கள் விவேகத்தைக்
கூர்மைப் படுத்துங்கள்.
பசித்த மனிதனே
புத்தகங்களை வந்தடை!
அது ஓர் ஆயுதம்.
நீ தலைமையை ஏற்க வேண்டும்"
என்பது பிரெஷ்டின் அறைகூவல்.

பிரெஷ்டின், 'தாய்' நாடகத்தில் கம்யூனிஸ்ட் தலைவராக வரும் பாவெல், பூர்ஷ்வாக்களின் ஆதிக்கத்திலிருந்த அரசவையும் சமுதாயத்தை யும் பின்வரும் பாடலில் தாக்குகிருர்;

"சட்ட நூல்களும்
கெடுபிடி உத்தரவுகளும்
அவர்களுக்குச் சொந்தம்
சிறைக்கூடங்களும்
காரக்கிரகங்களும்
அவர்களுக்குச் சொந்தம்,
அவர்களது
"கடுமையான நடவடிக்கைகள்" பற்றி
சொல்லவும் வேண்டுமோ?
சிறையதிகாரிகளும்
நீதிபதிகளும்
அவர்களுக்குச் சொந்தம்.
அவர்களுக்கு மடி நிறைய சம்பளம்,
எதையும் செய்ய
அவர்கள் தயார்!
இது உண்மைதான்
அதனல் என்ன?
உண்மையைக்கண்டு
அவர்கள் மிகவும்
நடுநடுங்க வேண்டுமா?

அவர்கள் அழிவதற்கு முன்
(அந்தக் காலம் நெருங்கிவிட்டது)
அவர்கள் செய்ததெல்லாம்
விழலுக்கு இரைத்த நீர் என்பதைக்
காண்பார்கள்.

செய்தித்தாள்களும்
அச்சுக் கூடங்களும்
அவர்களுக்குச் சொந்தம்
நம்மைத் தாக்கி
மௌனிகளாக்க
அவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பயன்படுத்துகிறுர்கள்:
அவர்தம் அரசியல் வாதிகளைப் பற்றி
சொல்லவும் வேண்டுமோ?
பாதிரிமார்களும் பேராசிரியர்களும்
அவர்களுக்குச் சொந்தம்.
அவர்களுக்கு மடிநிறைய ஊதியம்
எதையும் செய்ய
அவர்கள் தயார்.
இது உண்மைதான்
அதனுல் என்ன?
உண்மையைக் கண்டு
அவர்கள் மிகவும்
நடுநடுங்க வேண்டுமா?
அவர்கள் அழிவதற்கு முன்
(அந்தக் காலம் நெருங்கி விட்டது)
அவர்கள் செய்ததெல்லாம்
விழலுக்கு இரைத்த நீர்
என்பதைக் காண்பார்கள்.
டாங்கிகளும் பீரங்கிகளும்
அவர்களுக்குச் சொந்தம்
யந்திரத் துப்பாக்கிகளும்
வெடி குண்டுகளும்
அவர்களுக்குச் சொந்தம்
அவர்தம் குண்டாந்தடிகள் பற்றி
சொல்லவும் வேண்டுமோ?
போலீஸ் காரர்களும்
சிப்பாய்களும்
அவர்களுக்குச் சொந்தம்
அவர் தம் ஊதியமோ மிகக்குறைவு
எதையும் செய்ய
அவர்கள் தயார்!
இது உண்மைதான்
அதனுல் என்ன?
அவர்களது எதிரி வலுமிக்கவனு?
தகர்ந்து கொண்டிருப்பதை
தாங்கிப் பிடிக்க
தடுத்து நிறுத்தவேண்டுமென்கிறுர்கள்
எதுவும் பயனளிக்காது
என்பதை அவர்கள் உணரும்
அந்த நாள் வரும்; வெகுவிரைவில் வரும்
பின்னர்
'நிறுத்துங்கள்' என்று
ஓலமிட்டு ஓடுவார்கள் அவர்கள்
அவர் தம்
பணமோ பீரங்கிகளோ
அவர்களைக் காப்பாற்ற முடியாது.

என்று தீர்க்கதரிசனமாகக் கூறுகிறுர் பிரெஷ்ட்.

1871 மார்ச் மாதத்தில் பிரெஞ்சு கம்யூனுர்டுகள் பெற்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற வெற்றியை, புரட்சியைக்கடந்து செல்லுதல் என்று குறிப்பிட்டார் பிரெஷ்ட் எதிர் காலத்தில் நிறுவப்படவிருக்கும் பாட்டாளிவர்க்க அரசுக்கு இதுவே அடிநாதமாக அமைந்தது என்றும் அவர் கூறுஞர். 'எதிர்காலத்தில் அச்சத்தைக் களைவோம்' என்று அவர்கள் தீர்மானிக்கிறுர்கள். மேலும்,

'வாழ்வூதியம் எங்களுக்குக் கிடைக்க
வகை செய்ய மாட்டீர்
என்பதை அறிந்தோம்
எனவே, ஆலைகளை
உங்களிடமிருந்து வசப்படுத்திட
உறுதிகொண்டோம்.
உங்கள் இழப்பு
எங்கள் லாபம்
என்பதை உணர்ந்தோம்-
எம் ஆட்சியாளர்கள்
அளிக்கும் உறுதிமொழிகளை
சார்ந்திருக்க முடியாது
என்பதையும் உணர்ந்தோம்-
எனவே,
விடுதலைக் கீதமிசைத்து
நல்வாழ்வு தொடங்கிட
நாங்கள் முடிவு செய்துவிட்டோம்.
எங்கள் எதிர்காலம்
எம் ஆணையின்படி நடக்கும்.
பீரங்கியின் கர்ஜனைதான்
உமக்குப் புரிகின்ற மொழி
என்பதை உணர்ந்தோம்.
எங்கள் பாடத்தை
புரிந்து கொண்டோம்
என்பதை உங்களுக்கு
எடுத்துக் காட்ட வேண்டுமல்லவா?
அதற்காக
எங்கள் துப்பாக்கிகளை
உங்களுக்கு எதிராகத் திருப்புவோம்!
பிணைக் கைதிகளே
உங்களை விடுவிக்கப்போவது யார்?
சக அடிமைகளே
உங்கள் துயரத்தைப் பகிர்பவர்.
உங்கள் நெற்றி வியர்வை
நிலத்தில் சிந்துவதை
அவர்கள் காண்கிறுர்கள்.

(33ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களும்

# அவர்கள் மீதான பலாத்காரமும்

மாயா

பெண்களைப் பலாத்காரம் செய்தல் சமூக வரலாற்றில் முக்கியமான ஒரு அடக்குமுறைத் தந்திரோபாயமாகக் கையாளப்பட்டு வந்துள்ளது. எதிர்ப்புணர்ச்சி கொண்ட பெண்களையும் அவர்கள் மூலமாக ஆண்களையும் பயப்படுத்தவும் மனோரீதியாகப் பலவீனப்படுத்தவும் பெண்களை மானபங்கப்படுத்துவதை அவதானிக்கலாம். அமெரிக்க-வியட்நாம் யுத்தம், லெபனன் உள்நாட்டு யுத்தம், பங்களாதேஷில் பாகிஸ்தான் படையெடுப்பு ஆகியவை இதற்குச் சமீபகால உதாரணங்கள். எமது தமிழ்ப் பகுதிகள் இன்றைய உதாரணங்கள் சாதி, வர்க்கப் போராட்டங்களின் போதும் பெண்களுக்கு எதிரான பலாத்காரங்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. தனிப்பட்ட காரணங்களினலும், தூண்டுதலினலும் பலாத்காரம் சமூகத்தில் தொடர்ந்து நடைபெறுகின்றது. (இத்தகைய விசேடமான அரசியற் சூழ்நிலைகளில் பட்டுமல்லாது)

எத்தகைய சந்தர்ப்பத்தில் பலாத்காரம் நடைபெற்ருலும் அதனைத் தனிப்பட்ட அவமானமாகவும், மானக்கேடாகவும் எமது சமூகம்நோக்குகிறது. இவ்விடயம் பற்றிப் பல்வேறு தரத்திலுள்ள பெண்களுடனும் சமீபத்தில் உரையாடிய போது அவர்களிற் பெரும்பாலோர் இதனைப் பெண்ணின் வாழ்நாள் முழுவதும் மறையாத வடுவாகவும், தனிப்பட்ட அவமானமாகவும் கருதியதை உணரமுடிந்தது. ஒரு தாய் கூறினுள், "எனது மகளுக்கு மட்டும் இப்படி நடந்தால் நானே அவளைக் கிணற்றில் தள்ளி விடுவேன்"

சமீபத்தில் நடைபெற்ற வன்செயல்களின் போது இடம்பெற்ற பலாத்காரங்கள் பற்றி தகவல் தருவதற்கு இலகுவில் எவரும் முன்வரவில்லை. தாமாகவே முன்வந்து முறைப்பாடு செய்த பெண்களைப் பற்றியும் பலரும் இழிவாகப் பேசியதையும் அவர்களின் மேல் பல்வேறு குற்றச்சாட்டுகளை சுமத்தியதையும் அவதானிக்க முடிந்தது. பெண்களுக்கு எதிரான இவ்வன்செயலுக்குப் பெண்களே காரணம் என்று கூடச் சிலர் வாதிட்டனர். இப்பெண்கள் முறைப்படி ஆடை அணிந்திருக்கவில்லை; அதனுலேயே இவ்வாறு நடந்தது என்றும் சிலர் கூறினர்!

பெண்களை பலாத்காரம் செய்தல் தொடர்பான எமது சமூகக் கருத்தோட்டங்களையும், இன்றைய அபிப்பிராயங்களையும் நோக்கு போது நாம் பின்வரும் முடிவுகளைப் பெறலாம்.

1. பெண்களை பலாத்காரம் செய்வது இழிந்தது, அநீதியானது எனக் கருதப்பட்டாலும் பலாத்காரம்செய்வதைவிட அதற்கு உட்பட்ட பெண்ணே மிக மோசமாகப் பல வகையில் பாதிக்கப்படுகிருள். அவை:
   - அ. எந்தச் சூழ்நிலையில் பலாத்காரம் நிகழ்ந்தாலும் அப்பாவிப் பெண் சமூகத்தின் அவமதிப்புக்கு ஆளாக வேண்டியுள்ளது.
   - ஆ. திருமணம் செய்யாத பெண்ணுயின் அவளது திருமண வாய்ப்புகள் குறைகின்றன.
   - இ. திருமணமான பெண்ணுனல் கணவன்-மனைவி உறவில் நெருடல் ஏற்படுகிறது.
2. பெண்ணே தனது நடவடிக்கையால் பலாத்காரத்தைத் தூண்டுகிருள்.
3. இன்றைய வன்செயல்களின் போது மானபங்கப்படுத்தப்பட்ட பெண்களைக் கௌரவப் பிரஜைகளாகக் கருதி தியாகச் சிந்தையுள்ள [?] இளைஞர்கள் மணந்து கொள்ள வேண்டும் (இது 'முற்போக்கான' எண்ணம் கொண்டவர்கள் கூறும் கருத்தாகும்.)

இவற்றைத் நோக்கும்போது, உணர்ச்சி பூர்வமாக இந்த விடயம் பற்றித் திரு ஆலே சிப்பதும், மேற்கூறிய கருத்துக்களின் சரிபிழை பற்றி ஆராய்வதும், இவ்விடயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை குறித்துச் சரியான நிலைப்பாடு எடுப்பதும் அவசியமாகத் தோன்றுகிறது.

இதற்கு முன்னர் ஒருவிடயத்தை அழுத்தமாகக் குறிப்பிட விரும்புகிறேன். இராணுவத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர் தமிழ்ப் பெண்களைப் பலாத்காரம் செய்த பின்னரே பலாத்காரம் எமது கவனத்தை ஈர்ந்துள்ளது. இது மிகவும் பரிதாபகரமானதாகும். எமது சமூகத்தில், பெண்களுக்கு எதிரான வன்செயல்களின் மிகமோசமான வடிவமாக இது நெடுங்காலமாகவே நிலவி வந்துள்ளது. எத்தனையோ பலாத்கார வழக்குகளும். பெண்கடத்து வழக்குகளும் நாம் அறியாதவையல்ல, வீதிகளிற் பெண்களிடம் சேட்டை செய்வதிலிருந்து அபலைகளான பெண்களைப் பலாத்காரம் புரிவது வரை உள்ள பல்வேறான வன்செயல்கள் எமது சமூகத்திற்குள்ளேயே நிகழ்வதை எவரும் மறுக்கமுடியாது. உயர்சாதி நிலச் சொந்தக்காரர் தமது நிலத்தில் வேலை செய்யும், அல்லது குடியிருக்கும் வறிய, தாழ்ந்த சாதிப் பெண்களைப் பலாத்காரம் செய்வதும் ஒன்றும் புதிதல்ல. பொருளாதார ரீதியாகத் தங்கி வாழ்வதால் இப்பெண்கள் மௌனமாக இந்த இம்சைக்கு உட்படுகின்றனர்.

இவ்வாறு கூறுவது இராணுவத்தினரின் செயலை நியாயப்படுத்தவல்ல; மாறாகப் பெண்களுக்கு எதிரான வன்செயலாகப் பலாத்காரம் எப்போதும் நிகழ்ந்து வந்துள்ளது என்பதை வலியுறுத்தவே. எக்காலத்தில் எவரால் செய்யப்பட்டாலும் இது காட்டுமிராண்டித்தனமானதும், மிக உக்கிரமாக எதிர்க்கப்பட வேண்டியதும் ஆகும்.

* * *

பலாத்காரத்திற்கு உள்ளான பெண்கள் தாம் ''கற்பி''ழந்து விட்டதாக உண்மையாகவே நம்பித் தமது உயிரை மாய்த்துக்கொள்ள முனைவதாலும் தாழ்வுச் சிக்கலுக்கு ஆளாவதாலும் பலாத்காரம், கற்பு ஆகியவை பற்றிய உண்மையை சமூகத்திற்குக் குறிப்பாகப் பெண்களுக்குத் தெளிவுறுத்துவது அவசியம்.

தந்தை வழிச் சமூகத்தினதும், ஆண்மேலாதிக்கத்தினதும் ஒரு புருஷமண முறையினதும் தத்துவார்த்தக் கோட்பாடாகவே 'கற்பு' என்பது தமிழ்ச் சமூகத்தில் தோற்றம் பெற்றது என்பது சமூக வரலாறு எமக்குத் தரும் செய்தியாகும். இன்று நிலவும் ஒரு புருஷமணமுறை வரலாற்றின் ஒரு கட்டத்தில் உருவானதே தவிர அது என்றென்றைக்கும் நிரந்திரமான ஒரு மணமுறையாக இருக்கவில்லை. மனித வரலாற்றை எடுத்து நோக்கும் போது பலவிதமாக மணமுறைகளும் குடும்பஅமைப்புகளும் நிலவியதைக் காணலாம். ஆண்கள்-பெண்களுக்கிடையே வரையறையற்ற புணர்ச்சி நிலவிய ஆதிக்கட்டத்திலிருந்து இரத்த உறவுக் குடும்பம், குழு மணக் குடும்பம், இணைமணக் குடும்பம் என்று பல கட்டங்களைக் கடந்த பின்னர்தான் ஒரு புருஷ மணக்குடும்பம் உருவாகியது. ஒரு புருஷ மணக்குடும்பத்திற்கு முன்னர் நிலவிய மணமுறைகளில் ஆண் ஒரு பெண் மீது தனது முழு அதிகாரத்தை நிலைநாட்டவோ அல்லது தனது சொத்துக்கு உரிமையாகப் போகும் வாரிசுபற்றி நிச்சயம் கொள்வதற்கோ இடமிருக்கவில்லை; தனிச்சொத்துரிமையும் ஆண் ஆதிக்கமும் வளர்ந்ததுடன் இவ்விரு அம்சங்களும் தேவையாகின. ஒரு புருஷ மணமுறை இதற்கான வாய்ப்பை அளித்தது. எனவே ஒரு புருஷமணம் ஒருவனுக்கு விசுவாசமாயிருத்தல், கற்பு ஆகியவற்றின் மேன்மை பற்றிய கருத்துக்களும் இலக்கியங்களும் எழுந்தன. இந்த மேன்மைப்படுத்தப்பட்ட இலட்சியங்களுக்குப் பின்னால் ஆண்களின் அப்பட்டமான ஆதிக்க உணர்வு தான் உள்ளது. ஒருபுருவு குறித்து பிரடரிக் ஏங்கல்ஸ் தமது குடும்பம் தனிச் சொத்துடமை அரசு ஆகியவற்றின் தோற்றம் என்ற நூலில் பின்வருமாறு கூறினார். "அது ஆணின் மேலாதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டது; அதன் தெளிவான நோக்கம் விவாதத்திற்கிடமில்லாத தந்தை முறையுள்ள குழந்தைகளைப் பெறுவதுதான்;... இயற்கையான நிலைமைகளை அடிப்படையாகக் கொள்ளாமல் பொருளாதார நிலைமைகளை-அதாவது ஆதிகால, இயற்கையாக வளர்ந்த பொதுச் சொத்தின் மீது தனியுடமை வெற்றிபெற்றிருந்த நிலைமைகளை— அடிப்படையாகக் கொண்டு எழுந்த முதல் குடும்ப வடிவம் அது"

எனவே ஒரு புருஷமணமுறையினதும் அதனுடன் தொடர்புபட்ட ''கற்பு'' என்ற கோட்பாட்டினதும் தோற்றம் இவ்வாறு தான் அமைந்தது. இங்கு மீண்டும் ஏங்கல்ஸின் வாசகங்கள் நினைவு கூரத்தக்கவை. ''ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்பட்ட ஒரு சமரசமாக ஒரு தார மணமுறை (ஒரு புருஷ மண முறை) வரலாற்றில் தோற்றம் பெறவில்லை. மணமுறையின் உச்ச வடிவம் அது என்பது போகட்டும் அதற்கு மாறாக, ஒருபால் மற்றொரு பாலை அடிமைப்படுத்தியதாக அது தோற்றமளிக்கிறது ஏடறிந்த வரலாற்றுக்கு முந்திய காலங்களில் அறவே அறிந்திராத இருபால் சச்சரவு குறித்து விடுத்த பிரகடனமாகவே அது தோற்றமளிக்கிறது ... அடிமை முறையுடனும் தனிச்சொத்துடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[30ம் பக்கத் தொடர்ச்சி]

உங்களைப் பார்க்கும்
வரம் பெற்றவர்கள் அவர்களே!
தோழரே,
வாழ்ந்தால் அனைவரும்--
வீழின் ஒருவருமில்லை
தனியனுல் பிரச்சினைகளை
சமாளிக்க முடியாது.
ஒன்று துப்பாக்கிச் சனியன்
அல்லது கைவிலங்கு.
வாழ்ந்தால் அனைவரும்--
வீழின் ஒருவருமில்லை
ஒடுக்கப்பட்டவர்களே,
உங்களை அடிமை இருளில்
வீழ்த்தியவர்களை
வஞ்சகம் தீர்க்கப்போவது யார்?
துன்பமிகுந்த இவ்வேளையில்
உங்கள் சோதருடன்
ஆயுதம் தரித்த எழுச்சியில்
அணிவகுத்துச் செல்லுங்கள்
நாம் அனைவரும்
ஒன்றுபட்டு வஞ்சம் தீர்ப்போம்.
வாழ்ந்தால் அனைவரும்—
வீழின் ஒருவருமில்லை.
தனியனுல் பிரச்சினைகளை
சமாளிக்க முடியாது?
கஞ்சிக்கில்லாமல்
கலங்கி நிற்கும் உங்களுக்காக
குரல் கொடுக்கப்போவது யார்?
தனது பாரத்தை
இனியும் சுமக்க இயலாதவன்
அதனைப் பகிர்ந்துகொள்பவரோடு
அணிசேரட்டும்,
துன்பமும் துயரமும்
இன்றோடு முடியும்
இன்றோடு முடியும்
இல்லை நாளை என்பதை
உறுதிப்படுத்தட்டும்''

என்று அறைகூவல் விடுக்கிறார் பிரெஷ்ட்

ஆம், ஸ்தாபன ரீதியாகத் திரட்டப்பட்ட தொழிலாளியின் வர்க்கத்தால் தான் தொழிலாளி வர்க்கத்தை விடுவிக்க முடியும்.

> ''மனிதகுலம் ஆண்மையற்றுப் பேடிகளாய் அழிவதைக் காட்டிலும் ஆயிரம் முறை நான் பலாத்காரத்துக்காக துணிவேன். இந்தியா நிராதரவாய் அவமானத்திற்குப் பலியாகியோ அல்லது கோழைத்தனமான முறையில் உயிர் தரித்திருப்பதையோ விடவும், ஆயுதமேந்தித் தன்னை மானத்துடன் காப்பாற்றிக் கொள்வதையே நான் வரவேற்பேன்''
>
> **மகாத்மா காந்தி**

மார்க்சுசம்-எங்கல்சும் பிரகடனப்படுத்திய ''கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை''ப் பாடல்களாக வடிக்கத் திட்டமிட்டிருந்தார். பிரெஷ்ட் ஆனுல், இந்தத் திட்டத்தை அவர்கள் நிறைவேற்றுவதற்கு முன்பே அவரை மரணம் அழைத்துக் கொண்டது.

1955-ம் ஆண்டு பிரெஷ்டுக்கு லெனின் சர்வதேச சமாதான விருது அளிக்கப்பட்டது. அப்போது அவர்.

''இன்று நாம் அனுபவத்தில் கண்டுகொண்டிருக்கும் மகத்தான மாற்றம் ஏதோ ஒரு நிலையில் இருந்து மற்றொரு நிலைக்கு சர்வசாதரணமாக மாற்றிக் கொண்டுவிட்டது என்பதல்ல எளிமையாகச் சொல்வதனுல் இந்த யுகம் மாற்றத்தை விளைவிக்கும் யுகம். தனது சுற்றுப்புறச் சூழலை வரலாறு காணுத அளவுக்கு மனிதன் மாற்றி அமைப்பான் அதே நேரத்தில் சமூக வாழ்வின் அமைப்பையும் மாற்றுவான்'' என்று கூறினுர்.

''மனித குலத்தின் எதிர்காலத்தை, அடியிலிருந்து ஒடுக்கப்பட்ட சுரண்டப்பட்டவர்களின் நோக்கு நிலையிலிருந்தே பார்க்க முடியும் என்பது முக்கியமானதொரு பாடம். அவர்களுடன் சேர்ந்து போராடுபவன் தான் மனிதகுலத்திற்காகப் போராடுபவனுகிறுன்'' என்றும் அவர் கருதினுர்.

அவரைப் பொறுத்தவரையில் தொழிலாளி வர்க்கத்தின் கடமையானது தன்னைத்தானே உயர்த்திக் கொள்வது மட்டுமல்ல: அடக்கி ஒடுக்கப்பட்ட சுரண்டப்பட்ட மக்கள் அனைவரையும் விடுவிப்பதாகும் என்பது தெளிவு.

நன்றி: தாமரை
அக்டோபர் 1980

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்களும்... (32ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்தாற் போலவே அது ஒரு சகாப்தத்தைத் துவக்கி வைக்கிறது''

எனவே இம்மணமுறையினதும் கற்புக்கோட்பாட்டினதும் கபடத்தன்மையைப் பெண்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். கற்புநிலையென்று சொல்லவந்தார் இருகட்சிகளுக்கும் அதைப் பொதுவில் வைப்போம் என்று மேடைகளிற் பாடினாலும்கூட மணவாழ்வில் விசுவாசமின்றி இருக்கும் உரிமை இப்போதும்கூட ஆணிடமே இருக்கிறது. ஆனால் பெண்ணோ சுயவிருப்பமின்றி ஆணினது பலாத்காரத்துக்கு ஆளானால் கூட அவள் மோசமாகத் தண்டனை பெறுகிறாள். எமது தமிழ் இலக்கியங்கள் யாவும் இந்த அநியாயமான ஒருதலைப் பட்சமான ஆண் ஆதிக்கத்தை மேன்மைப்படுத்துவனவாகும். சீதையைத் தீக்குளிக்கும்படி இராமன் ஆணையிட்டதும் அகலியையைக் கௌதமர் கல்லாக்கியதும் இந்த அடிப்படையில்தான்.

எனவே இவற்றைத் தொகுத்து நோக்கும்போது தமது வாரிசுகளின் தந்தைமையை உறுதி செய்ய ஆணாதிக்கச் சமூகம் வகுத்த கோட்பாடே கற்பு என்பது தெளிவாகும். எனவே பலாத்காரம் செய்யப்பட்டால் கூட தாம் "கெட்டுப்போனவர்கள்" என நினைத்துப் பெண்கள் அவமானப்படுவதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

கற்பு பற்றிய இந்தக் கருத்துக்களைப் படிப்போரில் சிலர், இவை ஒழுக்கக்கேட்டுக்காகவே வாதிடுகின்றன என இவற்றைக் கொச்சைப்படுத்தலாம். இவர்கள் ஆண் - பெண் உறவுகளின் சமூகவியலையும், குடும்ப வடிவத்தின் மாறும், வளரும் தன்மையையும் புரிந்துகொள்ள மறுப்பவர்களே ஆவர்.

□ □ □

உண்மையில் பெண்களுக்கு எதிரான வன்முறையில் ஒன்று எனப் பலாத்காரத்தை கருதுவோர் திறந்த மனதுடனும் பரந்த அடிப்படையிலும் இதனை அணுகவேண்டும். பலாத்காரம் என்று கொள்ளப்படவேண்டியது எது என்பது ஒரு முக்கிய வினாவாகும்.

பெண்ணினது சுயவிருப்பம் இன்றி எந்த ஆணாவது (அவன் கணவனாகவும் இருக்கலாம்) ஒரு பெண்ணைத் தனது இச்சைக்குட்படுத்தல் பலாத்காரமாகும். பெண்ணினது சம்மதம் அற்ற உடலுறவு மாத்திரம் அல்ல ஏனைய பாலுறவு நோக்கமுள்ள உடற்துன்புறுத்தல்களும் கூட பலாத்காரமே ஆகும். (ஆனால் எமது சட்டங்கள் பெண்ணின் சுயவிருப்பமற்றதும் பலத்தின் பேரில் ஆணால் மேற்கொள்ளப்படுவதுமான உடலுறவையே Rape எனக் குறிப்பிடுகின்றன. சமீபத்தில் வல்வெட்டித்துறையில் நிகழ்ந்த வன்செயல்களின் போது பெண்கள் பலாத்காரப்படுத்தப்பட்டது தொடர்பாக அப்பகுதியின் முக்கிய பிரமுகர் ஒருவருடன் கதைத்தபோது அவர் "அங்கு கற்பழித்தல் அதிகம் நடைபெறவில்லை. பெண்கள் உடற்துன்புறுத்தலுக்கே ஆளானார்கள்" என்று கூறினார். பலாத்காரம்பற்றிய, சமூகத்தினதும் சட்டத்தினதும் கருத்தையே இது குறிக்கிறது. ஆனால் பலாத்காரம் என்பது பாலுறவு நோக்கமுள்ள அல்லது அது போன்ற உடற் துன்புறுத்தல்கள் யாவுமே என எமது கருத்தைத் திருத்திக்கொள்ளவேண்டும்.

பலாத்காரம் தொடர்பாக இன்று எம்மிடையே வழங்கி வரும் சட்டம் நூறு வருடங்களுக்கு முற்பட்டதாகும். 1883-ம் ஆண்டு இயற்றப்பட்டது. இதுவரை எத்தகைய திருத்தங்களுக்கும் உட்படாதவை அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் பலாத்காரம் தொடர்பாக ஏற்பட்ட சட்டத்திருத்தங்கள் எதுவும் இங்கு ஏற்படவில்லை இச்சட்டங்களை இங்கு இயற்றிய பிரிட்டிஷார் தமது நாட்டில் சட்டங்களை மாற்றிய பின்னர் கூட நாம் அவற்றை அப்படியே கைக்கொள்கிறோம் என்பது நகைப்புக்கிடமானது.

இச்சட்டங்கள் குற்றம் புரிந்த ஆணைத் தண்டிக்கவும் பெண்ணுக்கு நீதி வழங்கவும் வல்லமை உடையனவா? இன்றைய எமது சட்டங்களில் உள்ள மூன்று முக்கிய அம்சங்கள்:

1. பலாத்காரத்திற்குச் சாட்சிகள் அல்லது சான்றுகள் கேட்பது: இது பற்றிச் சட்டங்கள் தெளிவாகக் கூறாவிடினும் நீதிமன்ற வழக்குகளில் சாட்சிகள் கேட்பது நடைமுறையாக உள்ளது. ஆனால் இது மிக அநீதியானதாகும். ஏனெனில் பலாத்காரம் பொது இடத்தில் நடப்பதில்லை.

2. பலாத்காரத்திற்குத் தான் உடந்தை இல்லை என்பதைப் பெண் நிரூபிக்கும் தேவை பலாத்காரத்திற்கு இரையான பெண்ணை இது மேலும் இம்சிப்பதாகும் பலாத்காரத்தை வன்மையாக எதிர்க்கவேண்டாம், அத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞல் கொலே செய்யப்படலாம் என வைத்தியர்களும் பொலிஸாரும் பெண்களை எச்சரிக்கின்றனர். ஆனுல் நீதிமன்றமோ சான்றுகளைக் கேட்கிறது. தம்மைப் பலாத்காரம் புரிந்தவன் தண்டிக்கப்பட வேண்டும் எனப் பெண்கள் விரும்பினுல் தமது உயிராபத்தைப் பொருட்படுத்தாது அதனை எதிர்க்கவேண்டும் என இது நிர்ப்பந்திக்கிறது.

3. பெண்ணின் முற்கால வாழ்க்கை - அவள் திருமணமாகாத கன்னியா? பிறழ்ச்சியான பாலுறவுகளில் ஈடுபட்டவளா? போன்ற கேள்விகளும் நீதிமன்றங்களில் எழுப்பப்படுவதற்கு இச்சட்டங்கள் இடமளிக்கின்றன. ஒழுக்கமற்ற பெண் பலாத்காரம் செய்யப்படமுடியாது எனச் சமூகம் கருதுகிறது!

இந்த அம்சங்களே நோக்கும்போது இவை ஆணைத் தண்டிக்க வலுவற்றனவாகவும், பலாத்காரத்தினுல் பெண் அடைந்த உள, உடல் இம்சைகளுக்கு மேலாகப் பெண்ணைத் துன்புறுத்துவனவாகவும் அமைகின்றன.

எனவே பலாத்காரம் பற்றிப் பேசுபவர்களும், மனம் குமுறுபவர்களும் அவ் வன்செயல் பற்றி இத்தகைய புரிந்துகொள்ளலே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

1. பெண்ணைப் பலாத்காரம் செய்தல் எவரால் மேற்கொள்ளப்பட்டாலும் அது கண்டிக்கப்பட வேண்டியதும் தண்டனைக்குரியதும் ஆகும்.
2. பாலுறவு நோக்கமுள்ள சகல உடற்துன்புறுத்தல்களும் பலாத்காரமே.
3. பெண்ணுக்குச் சார்பான வகையிலும், குற்றம் புரிந்தவரை இலகுவில் தண்டிக்கும் வலுவுடையதாகவும் சட்டத்திருத்தங்களுக்காக கோரிக்கைகளை முன்வைத்தல் வேண்டும்.
4. பலாத்காரத்திற்குள்ளான பெண்கள் தாம் "கற்பிழந்து" விட்டதாக குற்ற உணர்வுக்கும் அவமான உணர்வுக்கும் உள்ளாகாமல் ஆண்களின் வன்செயலுக்கு எதிரான உணர்வை வளர்த்துக் கொள்ளல் வேண்டும்

# அண்மையில் தமிழ்ப்பகுதிகளில் கலை கலாச்சார நிகழ்ச்சிகள்

எந்தக் காலகட்டத்திலும் நிகழ்த்தப்படும் கலை கலாச்சார நிகழ்ச்சிகள் அப்போதுள்ள சமுதாய அமைப்பில் முற்போக்கான மாற்றங்களை ஏற்படுத்தத்தக்கதாக இருக்கவேண்டும். எதிர்காலத்தில் நாம் உருவாக்க நினைக்கின்ற சமுதாயம் ஒரு சிறந்த சமுதாயமாக அமைய வேண்டின் அம்மக்கள் ஒரு சிறந்த கலாச்சாரத்தைப் பேணுகிறவர்களாக இருக்கவேண்டும்.

மூன்ரும் உலக நாடுகளில் வாழ்கின்ற ஏழை மக்கள் தமது கஷ்டங்களுக்கான காரணம் என்ன என்று சிந்திக்கவிடாது தடுப்பதற்கு மேலே நாடுகளால் திட்டமிடப்பட்டே பல கலாச்சார சீரழிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உழைக்கும் மக்களின் சிந்தனைகளை நச்சுப்படுத்தி அவர்களை வெறும் மாயைகளிலேயே இருக்க வ்டுவதில் அந்நாடுகளின் முதலாளித்துவ வர்க்கம் கவனமாயிருக்கின்றது.

மிகச் சாதாரணமாக, இயற்கையான விஷயங்கள் கூட மிகக் கேவலமாக முக்கியப்படுத்தப்பட்டு மனதில் வக்கிரங்களை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் மிகைப்படுத்திக் காட்டப்படுகின்றன. பல மூன்ருந்தரத் தமிழ் சினிமாப்படங்களும் பல தென்னிந்திய பத்திரிகைகளும் மனிதர்களை மிருகமாக்குவதில் முனைந்து நிற்கின்றன.

தமிழீழப் பகுதியில் பாரம்பரியமாகக் காணப்பட்ட கலை வடிவங்கள் இடைக் காலத்தில் மங்கிப்போக மேலைத்தேய நாகரிக மோகத்தினுல் பொப்பிசை, டிஸ்கோ போன்றவை வளரத் தொடங்கின. பல தமிழ் நாடகங்களும் மூன்ருந்தர தென்னிந்தியா தமிழ் சினிமாப்படங்களை அடியொற்றியே இயற்றப்பட்டன. இவற்றிலிருந்து வேறுபட்ட பல நாடகங்களை அவைக்காற்றுகலைக் கழகம், நாடக அரங்கக் கல்லூரி போன்றவை அரங்கேற்றின. ஆனுல் பின்னர் இங்கு ஏற்பட்ட நெருக்கடி நிலை காரணமாக இவை பின்வாங்கின எனவே தமிழீழப் பகுதியில் கலை கலாச்சார ரீதியில் பாரிய வெற்றிடம் ஏற்பட்டது. இவ்வெற்றிடத்தை நிரப்ப தென்னிந்திய திரைப்படங்களே மக்களுக்கு கிடைத்தன. வீதிக்கொரு மினிசினிமாத் தியேட்டர்களும் வீட்டுக்கொரு வீடியோப்படமும் இன்றுள்ள உண்மை நிலே. இந்நிலை தொடருமாயின் கனவுகளில் சஞ்சரிக்கின்ற மோசமான நம்பிக்கைகளைக் கொண்ட படுகேவலமான சிந்தனைப் போக்குள்ள ஒரு இளைய தலைமுறையே மிஞ்சும்.

மக்களின் தேவையைப் பூர்த்திசெய்யக்கூடிய விதத்தில் முற்போக்கான கலையம்சம் கொண்ட கலைப்படைப்புக்கள் போதியளவு எம்மிடத்தில் இல்லாதது வருந்தத்தக்கது. இவைகளை உருவாக்கும் திறனுள்ளவர்கள் பலர் இன்று தமது கடமையைத் தவறவிட்டு மௌனமாக இருப்பது துரோகத்தனமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று தமிழீழப் பகுதியில் நிலவும் சூழ்நிலைகளில் பொழுதுபோக்கிற்காக இவ்வகையான நிகழ்ச்சிகள் நடாத்தப்படுவது நிச்சயமாக தவிர்க்கப்படவேண்டும். சமீபத்தில் பல்வேறுபட்ட கலை இலக்கியச் சஞ்சிகைகள் சமூகத்தின் இன்றைய தேவையை ஒட்டி இங்கு தோன்றியுள்ளன. இந்தியாவிலிருந்து இறக்குமதியாகின்றன குமுதம் போன்ற பத்திரிக்கைகளின் தாக்கத்திலிருந்து மக்களை மீட்கின்ற பணியில் ஓரளவு இவை வெற்றிபெற்றிருக்கின்றன.

இவற்றைத் தவிர, பரவலாக இன்று நாடகம், தெருக்கூத்து, கவிதா நிகழ்ச்சிகள், எழுச்சிப் பாடல்கள், வில்லுப்பாட்டு போன்ற நிகழ்ச்சிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றது மகிழ்ச்சிக்குரியது. கலாச்சார ரீதியில் மக்களை வளப்படுத்தவும், வரலாற்றை முன்னேக்கித் தள்ளக்கூடிய செய்திகளை கூறவும் இந்நிகழ்ச்சிகள் பயன்படுத்தப்பட வேண்டியது அவசியமாகின்றது.

பொதுவாக கலை நிகழ்ச்சிகளில் உருவம் உள்ளடக்கம் என்ற சிறு அம்சங்களை அவதானிக்க வேண்டும். உருவம் என்பது எமது பாரம்பரிய கலை வடிவங்களான கூத்து, நாட்டுப்பாடல் போன்றவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவது கூடிய தாக்கத்தையேற்படுத்தும். ஏனையவற்றை நாம் உள்வாங்கிக்கொண்டு பாரம்பரிய வடிவங்களில் புதிய மாற்றங்களை புகுத்துவதன் மூலம் சிறந்த வடிவங்களை ஏற்படுத்தமுடியும். எவ்வளவு சிறந்த கருத்தை நாம் சொல்ல முனைந்தாலும் கலை அம்சமில்லாத நிகழ்ச்சிகள் வரட்டுத்தனமாகவே இருக்கும்.

இதைத் தவிர கலை நிகழ்ச்சிகள் எவ்வளவு சிறந்த கலையம்சம் உள்ளதாகவிருந்தாலும் உள்ளடக்கம் சிறந்ததாக இல்லாவிட்டால் மிகப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். இக் கலை நிகழ்ச்சிகள் கூறும் செய்திகளை மக்களை நெறிப்படுத்த முற்போக்கான சமுதாயம் ஒன்றை உருவாக்க மக்களை எழுச்சி கொள்ளவைக்க வேண்டும்.

இனி சமீபத்தில் தமிழீழத்தில் நடாத்தப்பட்ட சில கலை நிகழ்ச்சிகளைக் கவனிப்போம். இவற்றுள் பல, மக்களுக்கு சிறந்த செய்திகளைக் கூற முயற்சித்தன. இம் முயற்சியை நாம் நிச்சயம் வரவேற்கவேண்டும். ஆயினும் இந்நிகழ்ச்சிகள் சம்பந்தமாக நேசமனப்பான்மையுடன் சில விஷயங்களை கூறலாம் என்று நினைக்கிறேன்.

சில நிகழ்ச்சிகள் பாரம்பரிய கலைகளிலிருந்து பெற்ற வடிவங்களில் நடாத்திக்காட்டப்பட்டன. இது மிகவும் பாராட்டத்தக்க விஷயம். ஆனல் வெறும் குறுகிய பிரச்சாரங்களை இதனூடாக செய்வது தவிர்க்கப்பட வேண்டும். மக்களுக்கு சிறந்த செய்திகளைக் கூறுவதன் மூலம் மக்கள் சிறந்த ஸ்தாபனத்தையே தேர்ந்தெடுக்கச் செய்யமுடியும். இந்நிகழ்ச்சிகளினூடாக மக்களை வெறுமனே உணர்ச்சி வேக மூட்டுவது தவிர்க்கப்பட வேண்டும். தெளிவான சிந்தனையூட்டப்படாத நிலையில் உணர்ச்சிவசப்படுவது எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும். மக்களை போலி நம்பிக்கைகளிலும் மாயைகளிலும் வாழத்தூண்டுமானல் அவை பிற்போக்கானவையே. எனவே மக்களுக்கு சரியான வழியைக் காட்டக் கூடியதாக கலை நிகழ்ச்சிகள் வளர வேண்டும்.

வேறு சில கலை நிகழ்ச்சிகள் சினிமாவின் தாக்கத்துக்குள் அமிழ்ந்து விடுகின்றன. சில எமது பாரம்பரிய கலை வடிவமில்லாத பொப் இசை நிகழ்ச்சி போன்ற வடிவங்களில் அமைக்கப்பட்டன. இது அழிந்து போகின்ற அந்நிய மாயையை புதுப்பிப்பதுடன் மக்கள் மத்தியில் தமது சொந்தக் கலாச்சாரத்திலிருக்க வேண்டிய பற்றுதலுக்கும் தீங்கு விளைவிக்கின்றது. அதேநேரம் அந்நிகழ்ச்சிகளில் பாடப்படுகின்ற விடுதலைப் பாடல்கள் சினிமா மெட்டுக்களில் இசையமைக்கப்படுவது வருந்தத்தக்கது. அதனல் விடுதலைப் பாடல்களின் வரிகள் கருத்துக்கள் எதுவுமே மனதில் பதியாது. சினிமாப்பாடலின் வரிகளே ஞாபகத்திற்கு வருகின்றன. எமது விடுதலைப் பாடல்கள் அப்பாடல்களிலுள்ள கருத்துக்களுக்கேற்ப இசையமைக்கப்படின் கூடிய தாக்கத்தையேற்படுத்தும். அத்தோடு ''இதோ இறந்தவர்களின் நினைவாக ஒரு துள்ளலிசைப் பாணியில் அறிப்பாளர் அறிவிப்பது மனதுக்கு மிகவும் கஷ்டமாயிருக்கும்.

எனவே நாங்கள் நல்ல முயற்சியை செய்ய முனைந்தாலும் கலை வடிவத்தை தேர்ந்தெடுப்பதிலும் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

தற்பொழுது வேகமாக நடைபெறும் ''டிஸ்கோ'' நிகழ்ச்சிகள் முற்றாகவே இங்கிருந்து அகற்றப்படவேண்டும். இது மக்களுக்கு எந்த விதமான முற்போக்கான செய்திகளையும் கூறுமலும், மக்களை வெறும் மந்தைகளாக மாயைகளிலேயே வாழவைக்கின்றன. யாரோ இயற்றிய பிரயோசனமற்ற பாடலுக்கு யாரோ துள்ளித் துள்ளி ஆட நாம் எதுவித நோக்குமில்லாது வாயைப்பிளந்து பார்த்துக் கொண்டிருப்பதில் என்ன லாபம்? வர்த்தக நோக்கங்களுக்காக நடாத்தப்படும் கலை நிகழ்ச்சிகள், சினிமா போன்றவற்றில் கலாச்சார சீரழிவையே நாம் எதிர்பார்க்க முடியும் எனவே இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு நாம் நேரத்தையும் பணத்தையும் செலவழிப்பது அர்த்தமற்றது.

எனவே எமது மண்ணிலிருந்து கிளர்ந்தெழுந்த பாடல்களை, பயன்படுத்தி அதிலிருந்து புதிய யுக்திகளைப் புகுத்தி முற்போக்கான செய்திகளை, சிறந்த கலையம்சத்துடன் சொல்வது என்பது மக்களிடையே மிகப்பெரிய தாக்கத்தை யேற்படுத்துதல் என்பதால் கூடிய வரையில் நாம் இவ்வகையில் முயற்சியெடுக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வாழ்த்துக்கள்*

நிதான விலையில்

உயர்ந்த ரகத்தில்

புதிய டிசைன்களில்

பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்

**க. நாகமுத்து அன் சன்ஸ்**

50, பெரியகடை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 23475

" இழத்தல் என்பதனையும்
ஒருநாள் இழப்போம் "

தளிரின் வளர்ச்சிக்கு

ஒரு நண்பனின் வாழ்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ சகலவித பைசிக்கிள்

✤ உதிரிப் பாகங்கள்

✤ தொலைக்காட்சி வகைகட்கும்

மற்றும்

வீட்டுத்தளபாட அலங்காரப் பொருட்களுக்கும்

**பஸ்ரின் பலஸ்**

மெயின் வீதி,
மருதமுனை 2,
கல்முனை.

" நாளுக்கு நாள் மாறும் நவநாகரீகப்

பிடைவைத் திணுசுகளுக்கு

ரஞ்சனாஸ்

17, 18, 18A நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 24015


அட்டைப்பதிப்பு : ஆனந்தா அச்சகம், அளவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org